RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 11 • இதழ் 5 • நவம்பர் 2026 • விலை ரூ.18/-

வெண்மை

தமிழ் மாத இதழ்

VENMAI

எண்ணங்கள்





நிர்வாகச் சிறப்பிதழ்



RAMRAJ©

SHIRTINGS • SUITINGS

Precision in every fold,
passion in

Every Thread



RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

தங்களை நிர்வாகம் செய்வதற்கு ஒவ்வொருவரும் கற்றுக்கொண்டு வேலை, தொழில், வியாபாரம் என எதிலும் திறனை வெளிப்படுத்தி நிறைவும் வளமும் பெற்று உயர்வாக வாழ்வதற்கு வழிகள் சொல்லும்

நிர்வாகச் சிறப்பிதழ்

என்ற இந்த இனிய நூலை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.



வெண்மை
நவம்பர் 2026
03

மதிப்பிற்குரியவர்களுக்கு...

வணக்கம்

சிறந்த நிர்வாகமும், தொடர்ந்த வெற்றியும் இரட்டை தண்டவாளங்கள் போன்றவை. இரண்டும் இணைந்து பயணிப்பது அவசியம். வெற்றிகரமான மனிதர்கள் அனைவருமே சிறந்த நிர்வாகிகள். எங்கு சிறந்த நிர்வாகம் இருக்கிறதோ, அங்கு வெற்றி நிச்சயம். சாதாரண மனிதர்கள் தொடங்கி சாதனையாளர்கள் வரை அனைவருக்கும் இது பொருந்தும். வெற்றி என்பது வெளிச்சம் என்றால், அதன் நிழலாக நிர்வாகம் இருக்கும். சிறந்த நிர்வாகி ஒருவர் சிறந்த செயல்வீரராகவும் இருப்பார். செயல்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது.

வயோதிகத்தின் காரணமாக கண்புரை நோய் வந்த ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள், பார்வை இழந்து மிகவும் கஷ்டப்பட்டனர். அறுவை சிகிச்சை செய்ய கையில் பணம் இல்லாமல் அவர்கள் வாழ்க்கை இருளில் மூழ்கியது. காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு சேவை மனப்பான்மையுடன் வாழ்ந்து வந்த டாக்டர் ஜி. வெங்கடசாமி, அரசு மருத்துவமனையில் கண்நோய் துறையில் மிகச்சிறந்த மருத்துவராகவும் நிர்வாகியாகவும் விளங்கினார். தன் மருத்துவக் குழுவினரின் நிர்வாகத் திறமையையும் வளர்த்தெடுத்தார். இந்த அனுபவம் பணி ஓய்வு பெற்றபிறகு பயனில்லாமல் போவதை அவரால் ஏற்க முடியவில்லை. கண்புரை நோயால் பார்வை இழப்பு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை முடங்கிப் போவதை அவரால் வேடிக்கைப் பார்க்க முடியவில்லை.

இருளில் முடங்கிப்போனவர்களுக்கு வெளிச்சம் தரும் புதிய பயணத்துக்கு 58 வயதில் அவர் தயாரானார். 1976–ம் ஆண்டு ஏப்ரல் 4–ம் தேதி, தனக்கு குருவாக வழிகாட்டிய மகான் அரவிந்தரின் பெயரில் மதுரையில் அரவிந்த் கண் மருத்துவமனையைத் தொடங்கினார். 11 படுக்கைகளுடன் தொடங்கியது அவரின் கனவுப் பயணம்.

அனைத்து மக்களுக்கும் கண்பார்வை கிடைக்க வேண்டும் என்கின்ற தன் இலக்கிற்கு ஏழ்மை, விழிப்புணர்வின்மை, அறுவை சிகிச்சைக்கான மருத்துவ கட்டமைப்பு வசதி ஆகிய மூன்று தடைகள் இருப்பதைக் கண்டறிந்தார். வசதி இல்லாத மக்களுக்கு இலவசமாகவும், ஓரளவு பணம் தர முடிந்தவர்களுக்குக் குறைந்த கட்டணத்திலும் சிகிச்சை தர இலக்கு நிர்ணயித்தார்.

கிராமங்களில் தினமும் வேலைக்குப் போனால்தான் அன்றைக்கான உணவு கிடைக்கும் எனும் நிலையில் இருப்பவர்கள் அதிகம். தங்கள் வீடுகளில் இருக்கும் முதியோரை மதுரையில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துவந்து கண்பரிசோதனை செய்யும் சூழல் அவர்களுக்கு இல்லை. இதை உணர்ந்த அவர், மக்களைத் தேடி மருத்துவம் போக வழிமுறைகளை உருவாக்கினார். மருத்துவக் குழுவினர் கிராமம் கிராமமாகச் சென்று இலவச கண் பரிசோதனை முகாம்களை நடத்தினர்.

தங்கள் வீட்டுக்கு அருகிலேயே பரிசோதனை செய்யும் வாய்ப்பை மக்கள் வரப்பிரசாதமாகப் பார்த்தனர். அடிப்படை கண் மருத்துவம் தேவைப்படுகிறவர்களுக்கு அங்கேயே தீர்வு கிடைத்தது. அறுவை சிகிச்சை தேவைப்படுகிறவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மருத்துவமனைக்கு வந்துபோக ஏற்பாடுகளைச் செய்தார். மிகக் குறைந்த கட்டணத்தில் தரமான கண் சிகிச்சையை அதிகம் பேருக்குத் தருவதற்கான சாத்தியத்தை வெங்கடசாமி அவர்களின் நிர்வாகத் திறமை நிகழ்த்திக் காட்டியது.

ஒரு கண் ஆபரேஷன் நடப்பதற்கு நோயாளியைத் தயார்படுத்துவது, அறுவை சிகிச்சை செய்வது, அதன்பிறகு நிலைமையைக் கண்காணித்து வார்டுக்கு மாற்றுவது என மூன்றுவித பணிகள் அவசியம். மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், மருத்துவர்கள் ஒருங்கிணைந்து இந்த மூன்றையும் சரியாகச் செய்யவேண்டும். ஆப்ரேஷனுக்குத் தயார் செய்யும் பணியை ஒரு குழு செய்யும்போது, மற்றவர்கள் தங்களிடம் நோயாளிகள் வரும்வரை காத்திருப்பார்கள். நோயாளியைத் தயார்படுத்தியவர்களுக்கு, அறுவை சிகிச்சை நடக்கும்போது வேலை இருக்காது. ஆபரேஷன் முடிந்த பிறகு ஒரு குழு கண்காணிப்புப் பணியைச் செய்யும்போது, முதல் இரண்டு தரப்புக்கும் வேலை இருக்காது.

மூன்று தரப்பினரின் பணித் திறன்களையும் முழுமையாகப் பயன்படுத்தினால் மட்டுமே குறைந்த கட்டணத்தில் தரமான சிகிச்சையை சாத்தியப்படுத்த முடியும் என்பதை உணர்ந்தார் வெங்கடசாமி. ஆபரேஷன் நடக்கும் இடத்தை மூன்று பிரிவாகப் பிரித்தார். ஒரு குழு ஒரு நோயாளியைத் தயார்படுத்தும்போதே, இன்னொருவருக்கு ஆபரேஷன் நடந்துகொண்டிருக்கும். ஏற்கனவே ஆபரேஷன் முடிந்த மூன்றாமவரை கண்காணித்து வார்டுக்கு



மாற்றுவார்கள். இப்படிப் பணிகளை மாற்றியதால், ஒரு ஆபரேஷன் நடந்த நேரத்தில் மூன்று பேருக்கு அறுவை சிகிச்சை செய்ய முடிந்தது. ஒரே அளவு மனிதத் திறன், ஒரே பணியிடம், மூன்று மடங்கு பலன் அதிகம். இதை அவர் செயல்படுத்திக் காட்டியபோது, ஏழை, நடுத்தர மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் தரமான சிகிச்சை சாத்தியமானது. 11 படுக்கைகளுடன் தொடங்கிய அரவிந்த் கண் மருத்துவமனை, இன்று பல ஆயிரம் மக்களின் வாழ்வில் ஒளியேற்றி உலகப் புகழ்பெற்ற கண் மருத்துவச் சேவை மருத்துவமனையாக இந்தியாவிற்கே பெருமை சேர்க்கிறது. நிர்வாகத்திறனின் அவசியத்தையும், பலனையும் உலகிற்கு எடுத்துக்காட்டும் சான்று இது.

நிர்வாகம் என்பது பிறருடைய வேலையை மேற்பார்வையிடும் செயல்முறை மட்டுமல்ல. அது இலக்குகளை உருவாக்குவது, வளங்களை ஒருங்கிணைப்பது, மனிதர்களின் திறமைகளை வெளிக்கொணர்வது, பிரச்சனைகளைத் தீர்ப்பது, தொடர்ந்து கற்றுக்கொள்வது என எல்லாம் ஒருங்கிணைந்தது. நிர்வாகத் திறனை வளர்த்துக்கொள்ள, முதலில் நாம் நம் நேரத்தையும், நம்முடன் பணிபுரிகிறவர்களின் நேரத்தையும் மதிக்க வேண்டும். அனுபவத்திலிருந்தும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சி செய்ய ஒரு மணி நேரம் இல்லை என்பவர்கள் நேர நிர்வாகம் தெரியாமல் தடுமாறுகிறார்கள் என அர்த்தம். எப்போதும் கடனில் உழல்பவர்கள், நிதி நிர்வாகம் பற்றிய தெளிவு இல்லாதவர்கள். ஒரு வீடு தூசி படிந்து, பொருட்கள் கலைந்து அந்த இடம் ஒழுங்கற்று இருந்தால் குடும்ப நிர்வாகத்தில் பிரச்சனை என அர்த்தம். தனி மனிதர்கள், குடும்பம், நிறுவனம், சமுதாயம், நாடு என நம் வாழ்வோடு தொடர்புடைய அனைத்தும் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து செல்ல வேண்டுமெனில் நிர்வாகம் செய்யும் திறன் நமக்கும், நம்மைச் சார்ந்தவர்களுக்கும் இருக்கவேண்டும். அதைத் தொடர்ந்து வளர்த்துக்கொள்ளவும் வேண்டும்.

வேலையைச் சிறப்பாகச் செய்வது திறமை. அதே வேலையைப் பல மனிதர்களைக் கொண்டு, குறைந்த வளங்களைப் பயன்படுத்தி, சரியான நேரத்தில், எதிர்பார்த்த தரத்தில் செய்து முடிப்பது நிர்வாகம்.



The Culturepreneur

தனிப்பட்ட திறமை வெற்றிக்கான அடித்தளம் மட்டுமே. நம் எண்ணத்தை செயலாக மாற்றும் மற்றவர்களின் திறனையும் ஒருங்கிணைப்பதே நிர்வாகத் திறன். சூழ்நிலையைப் புரிந்துகொள்வது, சரியான இலக்கைத் தீர்மானிப்பது, மனிதர்களின் திறமைகளை அடையாளம் காண்பது, அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது, பிரச்சனைகளை எதிர்கொள்வது, முடிவுகளை மதிப்பீடு செய்து எடுப்பது எனப் பல செயல்களின் ஒருங்கிணைப்பே நிர்வாகம். அதன் நோக்கம் வேலையைச் செய்து முடிப்பது மட்டுமல்ல; அதைச் சரியான முறையில் நேர்த்தியாக செய்து முடிப்பதாகும். அரசன் என்பவன் அதிகாரம் மிக்கவன் அல்ல. உடன் இருப்பவர்களின் திறன் அறிந்து பொறுப்புகளைப் பகிர்ந்து அளிப்பவன். நிர்வாகத்தை திறம்பட செயல்படுத்த அதிகாரம் ஒரு கருவியாக இருக்க வேண்டும். நிர்வாகத்திறனில் சிறந்த தலைமுறையை நாம் இணைந்து உருவாக்குவோம்.

எங்களின் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள், உறுதுணையாக இருக்கும் நேசத்துக்குரிய நெசவாளர்கள், பெருமைக்குரிய விற்பனையாளர்கள், எங்களுடன் இணைந்து பணியாற்றும் அன்பான அலுவலர்கள், பாசத்துக்குரிய பணியாளர்கள், 'வெண்மை' வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். நம் உள்ளங்களில் நம்பிக்கையின் தீபம் ஒளிரட்டும். இல்லங்களில் மகிழ்ச்சி நிலைக்கட்டும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

கே.ஆர்.நாகராஜன்

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்



உங்களை உயர்த்தும் நிர்வாகப் பண்புகள்!

இரண்டு கிராமங்களை இணைக்கும்விதமாக ஆற்றின் நடுவே ஒரு தொங்கு பாலம் கட்டப்பட்டது. நடந்து போவோர் மற்றும் சைக்கிள் உள்ளிட்ட இருசக்கர வாகனங்களில் செல்வோர் பயன்படுத்தும்விதமாக அது உருவானது. வேலை முடிந்ததும் தொழிலாளர்களைக் கூப்பிட்ட கான்டிராக்டர், எல்லோருக்கும் சம்பளத்தைக் கொடுத்தார். "உங்கள் வேலை முடிந்தது. நீங்கள் போகலாம்" என்றார்.

மற்ற எல்லா தொழிலாளர்களும் சென்றுவிட, வயதான ஒரு தொழிலாளி மட்டும் அங்கேயே காத்திருந்தார். "ஏன் நீங்கள் போகவில்லை?" என்று கான்டிராக்டர் கேட்டார். "நாங்கள் கட்டிய பாலத்தை மக்கள் இப்போது பயன்படுத்துவார்கள். அதை ஒருமுறை பார்த்து, எல்லாம் சரியாக இருக்கிறதா என்று உறுதி செய்துவிட்டுப் போகிறேன்" என்றார் அவர்.

ஒரு வேலையை முடிப்பதை எல்லோரும் செய்வார்கள். ஆனால், அந்த வேலையின் விளைவுக்குப் பொறுப்பேற்பது நிர்வாகிகளின் தனிப்பண்பு. சிறந்த நிர்வாகிகளுக்கு ஒரு வேலையை யார் நன்றாகச் செய்வார்கள், அதற்கு எதையெல்லாம் பயன்படுத்த வேண்டும் என்று தெரியும். புதிய யோசனைகளை ஏற்றுக்கொண்டு, தனக்குத் தெரியாத அனைத்தையும் கற்றுக்கொண்டு அவர் உயர்வு பெறுவார். தன்னைச் சுற்றி இருப்பவர்களையும் உயர்த்துவார்.

குடும்பப் பொறுப்பிலும், செய்யும் வேலையிலும், ஈடுபட்டிருக்கும் தொழிலிலும் ஒருவர் சிறந்த நிர்வாகியாக மாறுவதற்குத் தேவைப்படும் பண்புகள் இவை:

- கல்யாண விருந்து சமைப்பதைப் பாருங்கள். அங்கே தலைமை சமையல்காரர் உட்கார்ந்து சமைப்பதில்லை. எதைச் செய்ய வேண்டும் என்று மற்றவர்களுக்குக் கட்டளைகள் இட்டு, அங்கு செய்யும் வேலையை கவனித்து, தேவையான சூழலில் தலையிட்டு உணவின் ருசியை உறுதி செய்வார். சிறந்த நிர்வாகி ஒருவர் இப்படித் தன் பொறுப்புகளை எல்லோரிடமும் பகிர்ந்து கொடுப்பார். தன் பொறுப்பு என்ன என்பதை எல்லோருக்கும் உணர்த்துவார். எல்லோரும் இணைந்து வேலையை சிறப்பாகச் செய்வதற்கும் வழிகாட்டுவார்.

- வெளிப்படையான கருத்துப் பரிமாற்றம் அவசியம். ஒவ்வொருவரும் தங்கள் பிரச்சனைகளையும் குழப்பங்களையும் தயக்கம் இல்லாமல் சொன்னால்தான், அதற்கெல்லாம் தீர்வு தேட முடியும். 'இவரிடம் உண்மையைச் சொன்னால் திட்டுவார்' என்கிற மாதிரி மற்றவர்களுக்கு பயம் வந்தால், அங்கே எந்த வேலையும் சிறப்பாக நடக்காது.
- தான் எதற்காகப் படிக்கிறோம் என்ற நோக்கம் ஒரு மாணவனுக்குத் தெரிய வேண்டும். வேலையில், தொழிலில், வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும், தாங்கள் அதை எதற்காகச் செய்கிறோம் என்ற தெளிவு வேண்டும். ஒவ்வொருவருக்கும் இப்படித் தங்கள் நோக்கத்தையும் இலக்கையும் வெளிப்படையாகச் சொல்லி ஊக்கப்படுத்தும் நிர்வாகிகள் எப்போதும் வெற்றி பெறுவார்கள்.
- ஒருவர் எடுக்கும் முடிவு வெற்றியைத் தரலாம், சில நேரங்களில் பின்னடைவையும் ஏற்படுத்தலாம். எதுவாக இருந்தாலும், முடிவைத் தெளிவாக எடுக்க வேண்டும். முடிவெடுப்பதில் தயக்கமும் குழப்பமும் ஒரு நிர்வாகிக்கு ஏற்பட்டால், அவருடன் இருப்பவர்களும் தடுமாறிப் போவார்கள். உறுதியாக எடுக்கும் முடிவுகளே, ஒரு நிர்வாகியை வலிமையானவராகக் காட்டும்.
- ஒரு குடும்பத்தில் யாராவது ஒருவருக்குப் பிரச்சனை ஏற்படும்போது, மற்ற எல்லோரும் உதவிசெய்து அவர் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். ஒரு குழுவாக பலரும் இணைந்து ஒரு வேலையைச் செய்யும்போது அதில் எங்காவது தடைகள் ஏற்படும். அதைக் கடந்து வருவதற்கு எல்லோரும் உதவ வேண்டும். ஒருவரின் அனுபவம் இன்னொருவருக்கு வழிகாட்டும்போது அங்கே அற்புதங்கள் நிகழும். எல்லோருக்குள்ளும் நல்ல பிணைப்பு உருவாகும்.
- தலைமை ஏற்றிருக்கும் தளபதி எப்போதும் ஒரு போர்க்களத்தில் முதல் வரிசையில் நின்று போரிடுவார். மற்ற வீரர்கள் அவரால் ஊக்கம் பெற்று உற்சாகமாகச் சண்டையிடுவார்கள். எல்லோரும் இணைந்து செய்யும் ஒரு வேலையில் கடினமான நெருக்கடிகள் வரும்போது, ஒரு நிர்வாகி முன்னால் நின்று அதைத் தீர்க்க வேண்டும். தன் குழுவை வேலை செய்ய வைத்துவிட்டு காணாமல் போய்விடக்கூடாது. எல்லோருக்குள்ளும் நம்பிக்கையை ஏற்படுத்துவதே தலைமைப் பண்பு.



- எல்லாம் தெரிந்தவர் என்று இங்கே யாரும் இல்லை. தேவை ஏற்படும்போது எதையும் புதிதாகக் கற்றுக்கொள்ள ஒரு நிர்வாகி எப்போதும் தயாராக இருக்க வேண்டும். தான் எந்தத் துறையில் இருந்தாலும், அது சார்ந்த எல்லா விஷயங்களையும் தெரிந்து வைத்திருப்பது நல்லது. தன்னுடன் இருக்கும் எல்லோருக்கும் இப்படித் தேவைப்படும் பயிற்சிகளை வழங்குவதும் சிறப்பு.
- ஒவ்வொரு வேலையையும் குறிப்பிட்ட நேரத்துக்குள் செய்து முடிக்க வேண்டும். இது குடும்பத்துக்கும் பொருந்தும். வேலை அல்லது தொழிலுக்கும் பொருந்தும். அதற்கு ஏற்றபடி பொறுப்புகளைப் பகிர்ந்துகொடுத்து, தேவைப்படும் சூழலில் சிலருக்குக் கூடுதலாக வேலைகளைக் கொடுத்து எதையும் செய்து முடிப்பது சிறந்த நிர்வாகப் பண்பு.
- ஒவ்வொருவரின் வேலையையும் சரியாக மதிப்பிட வேண்டும். சிலர் வேலையில் தடுமாறலாம். சிலருக்கு சில விஷயங்கள் புரியாமல் போகலாம். அப்படி இருக்கும் ஒவ்வொருவரையும் தனியாக அழைத்துப் பேசி, அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறோம் என்பதைச் சொல்ல வேண்டும். தவறு செய்பவர்களைத் தனியாகக் கூப்பிட்டுக் கண்டித்து, சரியாகச் செய்வது எப்படி என்று கற்றுக்கொடுப்பது நல்ல பண்பு. சிறப்பாக வேலை செய்பவர்களை எல்லோரது எதிரிலும் பாராட்ட வேண்டும். மற்ற எல்லோரையும்விட சிலர் மிகச் சிறப்பாக உழைப்பார்கள். அவர்களுக்கு அதற்கு ஏற்ற அங்கீகாரம் தந்தால், மற்றவர்களும் அப்படிச் செயல்பட ஆரம்பிப்பார்கள். அதேசமயத்தில், 'இவர் பாரபட்சம் காட்டுகிறார்' என்ற உணர்வு யாருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது.
- குழுவில் எல்லோருடனும் இணக்கமான உறவில் இருக்க வேண்டும். ஒருவர் செய்யும் வேலையைத் தாண்டி அவரது குடும்பம், உடல்நலப் பிரச்சனைகள், விருப்பங்கள், ரசனைகள் என்று எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவர்கள் செய்யும் வேலை எப்படி இருக்கிறது என்பதை அடிக்கடி அவர்களிடம் சொல்ல வேண்டும். எவ்வளவு நெருக்கடியான சூழலையும் பதற்றமே இல்லாமல் அணுகும் நிர்வாகி, தன்னைச் சுற்றி இருப்பவர்களிடமும் அதே உணர்வை ஏற்படுத்துவார். எப்போதும் நேர்மறையாகவே பேசும் நிர்வாகி, எல்லோரிடமும் உற்சாகமான மனநிலையை உருவாக்குவார். ●



சொல்வதைச் செய்!

ரமேஷ் வேலையில் சேர்ந்த முதல் நாளே ஏதோ சந்தேகம் கேட்டபோது, ‘‘சும்மா கேள்வி கேட்காதே! நான் சொல்றதைச் செய்’’ என்றார் மேனேஜர். அவன் இப்போதுதான் கல்லூரி முடித்து முதன்முதலாக ஒரு வேலையில் சேர்ந்திருந்தான். நிறைய கற்றுக்கொள்ள அவன் ஆசையாக இருந்தான். அதற்காக அவன் சந்தேகம் கேட்டபோதெல்லாம் மேனேஜர் இப்படித்தான் கடுமையாகச் சொன்னார்.

ஒரு வேலையை எளிதாகச் செய்வதற்கு அவன் ஒரு வழியைச் சொன்னபோது, ‘‘என் அனுபவம் என்ன? உன் அனுபவம் என்ன? எனக்கு எது சரின்னு தெரியும். நான் சொல்றதைச் செய்” என்றார். ஒரு பிரச்சனைக்கு அவன் யோசித்து ஒரு தீர்வு சொன்னபோது, ‘‘உன்னைப் பற்றி மனசுல என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே? நீ எதையும் யோசிக்க வேண்டாம். சொல்றதை செய்தா போதும்” என்றார்.

வருடங்கள் ஓடின. ரமேஷ் இப்போது வேறு அலுவலகம் சென்று, அனுபவமிக்க ஒரு மேனேஜர் ஆகிவிட்டார். தன்னிடம் வேலை பார்ப்பவர்கள் ஏதாவது கேள்விகள் கேட்கும்போதெல்லாம் அவருக்குத் தன் பழைய மேனேஜர் ஞாபகம் வரும். ஒரு நிர்வாகி எப்படியெல்லாம் இருக்கக்கூடாது என்பதைக் கற்றுத் தந்ததற்காக அவருக்கு தினமும் மனதுக்குள் நன்றி சொல்வார் ரமேஷ்.



மனதால் உணர்வது மறக்காது!

ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் தன் வேலை முடிந்து கிளம்புவதற்கு இரவாகி விட்டது. அலுவலகத்திலிருந்து வெளியே வந்தபோது மழை

நம்மை நன்கு நிர்வாகம் செய்வோம்!

இன்பத்தை மட்டுமே எப்போதும் விரும்புகிற மனநிலையை மாற்ற வேண்டும். துன்பத்தையும் இயல்பு என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். வாழ்வில் வெற்றிகளை எதிர்கொள்ளும் அதே மனநிலையுடன் பின்னடைவுகளையும் சந்திக்க வேண்டும்.கவலையேவாழ்க்கையின்முதல்எதிரி. நம் மனதை அது ஆக்கிரமிக்க அனுமதித்தால், அதன்பின் முடங்கிவிடுவோம். வலியில்லாமல் வாழ்க்கை நடக்காது. ‘தானும் துன்பப்படாமல், பிறரையும் துன்பப்படுத்தாமல் வாழ்வதுதான் வாழ்க்கை’ என்பது நாம் உணரவேண்டிய பாடம்.

நம் மேலதிகாரியை மாற்ற முடியாது, ஆனால் மேலதிகாரி குறித்த நம் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள முடியும். வேலையை அடிக்கடி மாற்ற முடியாது. ஆனால், வேலை பற்றிய மன உளைச்சலை மாற்றிக்கொள்ள முடியும். உலகத்தை மாற்ற முடியாது. ஆனால், உலகம் பற்றிய நம் கவலையை மாற்றலாம். இன்பமோ, துன்பமோ வெளியிலே இல்லை. நமக்குள்தான் இருக்கிறது.



பெய்துகொண்டிருந்தது. வாசலில் நின்ற செக்யூரிட்டி, மழைச்சாரலில் நனைந்துகொண்டிருந்தார். உரிமையாளர் காரில் ஏறும்போது தன் குடையை அந்த செக்யூரிட்டியிடம் கொடுத்து, "இதைப் பிடித்துக் கொள்!" என்றார். "சார், உங்களுக்குத் தேவையில்லையா?" என்று கேட்டார் செக்யூரிட்டி. "நான் காரில் போகிறேன். எனக்குத் தேவையில்லை. நீ மழையில் நனைகிறாய், உனக்குத்தான் தேவை" என்றார் உரிமையாளர்.

அடுத்தநாள் அந்த செக்யூரிட்டி வழக்கத்தைவிட உற்சாகமாக வேலை செய்துகொண்டிருந்தார். உரிமையாளர் அவருக்குக் கொடுத்த குடை சாதாரணமான பொருளாக இருக்கலாம். ஆனால், 'நம் நிறுவனத்தின் உரிமையாளர் என் நலனில் அக்கறை காட்டுகிறார்' என்று அவர் மனதில் எழுந்த நம்பிக்கை உணர்வு விலை மதிக்க முடியாதது. இந்த உணர்வைக் கொடுப்பது, நிர்வாகத்தில் மிக முக்கியமான தேவை.





குழந்தை மனநிலை வேண்டாம்!

'ஒரு குழந்தையைப் போல இருங்கள்' என்று எல்லோரும் சொல்வார்கள். கற்றுக்கொள்வதிலும், அடுத்தவர்களை நேசிப்பதிலும் குழந்தை போல இருக்கலாம். ஆனால், ஒரு விஷயத்தில் மட்டும் நமக்குக் குழந்தை மனநிலை வேண்டாம்.

ஒரு குழந்தை எதையாவது விரும்பினால், தனக்கு அது வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கும். அது கிடைத்தால் சந்தோஷப்படும். கிடைக்காவிட்டால் அழுது புரண்டு அடம் பிடிக்கும். அது கிடைக்கும்வரை சும்மா இருக்காது. நம்மில் பலரும் இன்னும் குழந்தைகளைப் போலத்தான் நடந்துகொள்கிறோம். நமக்கு சாதகமான விஷயங்கள் நடந்தால் மகிழ்கிறோம். அப்படி நடக்காதபோது கோபப்படுகிறோம். இந்தக் குழந்தை மனநிலையைக் கைவிட்டால், வாழ்க்கையில் நிம்மதி நிலைக்கும்.

கற்றுக்கொடுக்கும் யானை!

பல நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களின் சாதனைகளை கூட்டம் கூட்டியோ, நோட்டீஸ் போர்டில் அறிவிப்பு ஒட்டியோ, இமெயில் அனுப்பியோ பாராட்டுகின்றன. டென்மார்க் நாட்டில் ஒரு கார் நிறுவனம் தன் ஊழியர்களை வித்தியாசமான முறையில் பாராட்டுகிறது.

யாராவது சிறந்த சாதனை செய்தாலோ, வழக்கமான வேலைகளைத் தாண்டி வித்தியாசமாக ஏதேனும் செய்தாலோ, புதிய நடைமுறைகளை அறிமுகம் செய்தாலோ, அதைப் பாராட்டி அவர்களுக்கு 2 அடி உயர யானை பொம்மை ஒன்றை நிர்வாகிகள் வழங்குவார்கள். அது அந்த ஊழியரின் டேபிளில் பெருமைக்குரிய அடையாளமாக வைக்கப்படும்.

சக ஊழியர்கள் அந்த பொம்மையைப் பார்த்ததும் ஆச்சர்யமாகி, "அடடே! இந்த முறை யானை பொம்மை உங்களிடம் வந்திருக்கிறதா? நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்கிறார்கள். பாராட்டு பெற்ற ஊழியரும் தன் சாதனைகளை விவரிக்கிறார். அதிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். அதுமட்டுமில்லை, தாங்களும் விரைவில் அந்த யானை பொம்மையைப் பெற வேண்டும் என்று ஊக்கம் பெறுகிறார்கள்.

சாதிக்க உதவும் 8 நிர்வாக விதிகள்!



பொசைடன் என்பவர் கிரேக்க புராணங்களில் கடல் கடவுளாகக் கருதப்படுகிறார். உலகின் கடல்கள் எல்லாமே அவர் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. தண்ணீர் எப்படிப் போக வேண்டும், எவ்வளவு போக வேண்டும், அலை எப்படி அடிக்க வேண்டும் என்று எல்லாவற்றையும் கணக்குகள் போட்டு அவர்தான் கட்டுப்படுத்துகிறார்.

அவருக்கு உதவி செய்ய ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆனால், தன்னைப் போல அவர்களுக்கு சரியாகக் கணக்குகள் போட்டு வேலை செய்ய வராது என்று பொசைடன் நினைக்கிறார். அதனால் அவர்களை நம்பாமல் எல்லா வேலைகளையும் தானே செய்கிறார். பொசைடனை வேறு எங்காவது மாற்றலாம் என்று மற்ற கடவுள்கள் நினைத்துக் கூப்பிடுவார்கள். அவர் சில நிமிடங்கள் கடல்களைக் கவனிக்காமல் போனாலும் உடனே பல குழப்பங்கள் ஏற்பட்டு உலகமே நெருக்கடிக்கு ஆளாகும். அதனால், "நீ கடலையே கவனி" என்று கடவுள்கள் அவரை அனுப்பிவிடுவார்கள்.

பொசைடனுக்கு இந்த வேலை பிடித்திருக்கிறதா என்று கேட்டால், 'இல்லை' என்றுதான் சொல்வார். ஓய்வு எடுக்காமல், எங்கும் போகாமல், எந்த சுகங்களையும் அனுபவிக்காமல் எப்போதும் இப்படி வேலை செய்ய வேண்டி இருக்கிறதே என்று அவர் பல நேரங்களில் எரிச்சல் அடைவார். அப்போதெல்லாம் பெரும் புயல்களையும் சூறாவளிகளையும் ஏற்படுத்துகிறார்.

இது கற்பனைக் கதையாக இருக்கலாம். ஆனால், நிறைய பொசைடன்கள் பல இடங்களில் இருக்கிறார்கள். 'நம்மை விட்டால் இந்த வேலையைச் செய்ய ஆள் இல்லை' என்ற ஈகோ அவர்களை ஆட்டிப் படைக்கிறது. மற்றவர்களை நம்புவதில்லை. எரிச்சலுடன் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். இதனால் அவர்களுக்கும் பலன் இல்லை, அவர்களின் நிறுவனத்துக்கும் பலன் இல்லை.

இப்படி இல்லாமல் சிறந்த நிர்வாகியாக மாற சில வழிகள்:

- ஒவ்வொருவரிடமும் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள். எல்லோரும் தங்கள் கருத்தை வெளிப்படையாகச் சொல்லும் சூழலை உருவாக்குங்கள்.
- முக்கியமான வேலைகளில் அதிக நேரம் செலவிடுங்கள். மற்ற வேலைகளை அதற்காக அலட்சியம் செய்துவிடாதீர்கள்.
- ஒவ்வொருவரின் பங்களிப்பையும் பாராட்டுங்கள். கூடுதல் உழைப்பைத் தருபவர்களுக்கு நன்றி சொல்ல மறக்காதீர்கள்.
- மற்ற எல்லோரும் பரபரப்பாக வேலை பார்க்கும் நேரத்தில் நீங்கள் காணாமல் போய்விடாதீர்கள். அவர்களுடன் இணைந்திருங்கள்.
- வேலையைக் கடினமானதாக மாற்றும் தடைகளை அகற்றுவதே, அதை சுலபமாகச் செய்து முடிப்பதற்கு முதல் தேவை. அதைச் செய்யுங்கள்.
- ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் வேலை பார்க்கும், மற்றவர்களை மரியாதையுடன் நடத்தும் சூழலை உருவாக்குங்கள்.
- முடிவெடுக்கும் உரிமையைப் பகிர்ந்து கொடுங்கள். அப்போதுதான் எல்லோருக்கும் பொறுப்புணர்வும் ஈடுபாடும் வரும்.
- சிலருக்கு ஒருமுறை சொன்னாலே புரியும், சிலருக்கு விளக்கமாகப் பலமுறை சொல்ல வேண்டியிருக்கும். ஒவ்வொருவரின் இயல்பு அறிந்து வேலை வாங்குங்கள். ●



தீபாவளி
மகிழ்ச்சியின் ஒளி பரவட்டும்!

ராமபிரான் வனவாசத்தை முடித்துக்கொண்டு சீதையோடும் லட்சுமணனோடும் அயோத்திக்குத் திரும்பி அரியணையில் அமர்ந்த நன்னாளே தீபாவளித் திருநாள் என்று கருதப்படுகிறது. நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் தீபங்கள் ஏற்றி அவதார புருஷரை வவேற்றார்கள். அன்றைய தினம் அயோத்தி மாநகரமே வண்ண விளக்குகளால் பிரகாசித்தது. ராமரையும் சீதையையும் வரவேற்ற கௌசல்யா தேவி, "விளக்கேற்ற வந்த திருமகளான நீ இல்லாமல் அரண்மனையே இருண்டு கிடந்தது. நீ வந்து விளக்கேற்று. ஒளி பரவட்டும்" என்றார். அதன்படி சீதா தேவி வரிசையாக தீபங்களை ஏற்றி வைத்து வழிபட்டார். அதுவே தீபாவளி ஆனது என்று சொல்வார்கள்.

தமிழர்களின் வாழ்வில் பண்டிகைகள் என்பவை வெறும் கொண்டாட்டங்கள் மட்டுமல்ல; குடும்ப உறவுகளைப் புதுப்பிக்கும், மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும், பண்பாட்டைப் பாதுகாக்கும் இனிய தருணங்கள். அத்தகைய சிறப்புமிக்க பண்டிகைகளில் தீபாவளி முதன்மையானது. இருளை நீக்கி ஒளியைப் பரப்பும் இந்தத் திருநாள், ஒவ்வொரு தமிழர் இல்லத்திலும் உற்சாகத்தையும் புத்துணர்வையும் கொண்டு வருகிறது.

தீபாவளி என்றாலே அதிகாலையில் எழுவது, எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, புத்தாடை அணிவது, இறைவனை வழிபடுவது, பெரியவர்களிடம் ஆசி பெறுவது என ஒவ்வொரு வீட்டிலும் மகிழ்ச்சியான தொடக்கம் அமைகிறது. வீட்டின் வாசலில் கோலமிட்டு, விளக்கேற்றி, இனிப்புகளைப் பரிமாறி உறவினர்களை வரவேற்பது நம் பாரம்பரியத்தின் அழகிய வெளிப்பாடாகும்.

தீபாவளியின் மற்றொரு சிறப்பு அதன் சுவைமிகுந்த உணவு வகைகள். முறுக்கு, அதிரசம், மைசூர்பாகு, லட்டு போன்ற பலகாரங்களை வீட்டிலேயே செய்யும்போது, சமையலறையே கொண்டாட்டக் களமாக மாறிவிடுகிறது. பாட்டி, அம்மா, குழந்தைகள் என்று குடும்பமே இணைந்து பலகாரங்கள் சுடுவதும், அவற்றை அண்டை வீட்டாருக்கும் நண்பர்களுக்கும் வழங்குவதும் பகிர்ந்துண்ணும் பண்பாட்டை வளர்க்கின்றன.

வாழ்க்கைத் தேவைகளுக்காக எங்கெங்கோ சென்று பணிபுரியும் உறவுகள் அனைவரும் ஒன்றுகூடுவது தீபாவளி பண்டிகையில் நிகழ்கிறது. அதுவே மகிழ்ச்சியின் ஒளியை ஒவ்வொரு இல்லத்திலும் நிரப்புகிறது. குழந்தைகளின் சிரிப்பும், பெரியவர்களின் வாழ்த்துகளும், உறவினர்களின் உரையாடல்களும் இல்லத்தைக் குதூகலத்தின் முகவரியாக மாற்றுகின்றன. கருத்து வேறுபாடுகளை மறந்து அன்பைப் பகிர்ந்துகொள்ளவும், பழைய நினைவுகளைப் புதுப்பிக்கவும் இந்தத் திருநாள் ஒரு நல்ல வாய்ப்பாக அமைகிறது.

தீபாவளியைக் கொண்டாடும்போது உடல்நலத்தையும் சுற்றுச்சூழலையும் கருத்தில் கொள்வது அவசியம். உடல்நலத்துக்கு உகந்தபடி பட்சணங்களை சாப்பிடுவதும், ஒலி மற்றும் காற்று மாசைக் குறைக்கும் வகையில் பட்டாசுகளைப் பாதுகாப்பாகக் கையாள்வதும் முக்கியம். முதியவர்கள், குழந்தைகள் ஆகியோரின் நலனைக் கவனிப்பதும் நமது கடமையாகும். இயன்றவரை ஆதரவற்றவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் புத்தாடைகள், இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளலாம்.

தீபாவளியின் உண்மையான சிறப்பு புத்தாடைகள், இனிப்புகள், பட்டாசுகள் ஆகியவற்றையும் தாண்டி மகிழ்ச்சி, அன்பு, ஒற்றுமை, பகிர்வு ஆகியவற்றில்தான் அடங்கியிருக்கிறது. நம் இல்லங்களில் மகிழ்ச்சியின் ஒளி நிறைய வேண்டும்; எங்கும் அன்பு பரவ வேண்டும்; உறவுகள் மேம்பட வேண்டும்; நம்பிக்கை நிலைக்க வேண்டும்!



உங்களை நிர்வாகம் செய்ய உங்களுக்குத் தெரியுமா?

படிப்பு, வேலை, தொழில், வியாபாரம் என எதையும் சிறப்பாகச் செய்யத் தெரிந்தவரே வாழ்வில் வெற்றி பெறுவார். அதற்கு ஒவ்வொருவரும் தனிப்பட்ட வாழ்க்கையில் தங்களை நிர்வாகம் செய்யத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நேரம், உணர்வுகள், பழக்கவழக்கங்கள், பொறுப்புகள் மற்றும் இலக்குகளை எந்த அளவுக்குச் சிறப்பாக நீங்கள் நிர்வாகம் செய்கிறீர்கள்? ஒரு சுயபரிசோதனை செய்து பார்க்கலாமா?

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு நன்கு யோசித்து சரியான விடையைத் தேர்வு செய்யுங்கள்...

1. காலையில் தூங்கி எழுந்ததும் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்?

அ. இன்றைய வேலைகளையும் பிரச்சனைகளையும் நினைத்து எரிச்சல் வரும் ☐

ஆ. பலவித குழப்பமான சிந்தனைகள் என்னை சோர்வடையச் செய்யும் ☐

இ. இன்றைய நாளை உற்சாகமாக எதிர்கொள்ளலாம் என நினைப்பேன் ☐

2. ஒரு நாளில் நீங்கள் விரும்பும் நேரம் எது?

அ. இரவு. இன்றைய வேலைகளை எப்படியோ முடித்துத் தொலைத்து ஓய்வெடுக்கும் நேரம் ☐

ஆ. மாலை. ஓரளவு வேலைகள் முடிந்து சற்று நிதானமாக இருக்கும் நேரம் அது ☐

இ. காலை. நமக்கு எல்லா வாய்ப்புகளையும் தரும் புதிய நாளின் தொடக்கம் அது ☐

3. ஒரே நேரத்தில் பல வேலைகள் இருக்கும்போது என்ன செய்வீர்கள்?

அ. எதை முதலில் செய்வது என்று தெரியாமல் திணறுவேன் ☐

ஆ. எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்ய முயன்று தடுமாறுவேன் ☐

இ. முக்கியத்துவம் மற்றும் அவசரத்தின் அடிப்படையில் வரிசையாகச் செய்வேன் ☐

4. ஒரு புது வேலையை செய்யத் துவங்கும் முன் என்ன நினைப்பீர்கள்?

அ. இதையெல்லாம் செய்ய வேண்டி இருக்கிறதே என வேதனைப்படுவேன் ☐

ஆ. என்னால் செய்ய முடியுமா என்ற சந்தேகத்துடனே வேலையைச் செய்வேன் ☐

இ. சிறப்பாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் அதைச் செய்வேன் ☐

5. வழக்கமான வேலையைத் தாண்டி ஒரு வேலையைத் தந்தால்...

அ. என்னால் முடியாது என மறுத்து விடுவேன் ☐

ஆ. ஒப்புக்கொண்டு பிறகு புலம்பியபடி இருப்பேன் ☐

இ. விரும்பிச் செய்து, அதில் என் திறமையை வெளிப்படுத்துவேன் ☐

6. நீங்கள் செய்த ஒரு விஷயம் தவறு என்று சுட்டிக் காட்டப்பட்டால்?

அ. நான் செய்தது எப்படி தவறாக இருக்க முடியும்? அதை சரி என நியாயப்படுத்துவேன் ☐

ஆ. நான் செய்தது தவறு என்று தெரிந்தாலும், அதை ஒப்புக்கொள்ள மாட்டேன் ☐

இ. அதை மனதார ஏற்றுக்கொண்டு என்னைத் திருத்திக்கொள்ள முயல்வேன் ☐

7. உங்களைப் பற்றி நீங்கள் எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?

அ. என்னைப் பற்றி எனக்குத் தெரியும். இதில் மதிப்பிடுவதற்கு என்ன இருக்கிறது? ☐

ஆ. என் பலம் எனக்குத் தெரியும். பலவீனங்களை அதிகம் ஆராய்வதில்லை ☐

இ. என் பலம், பலவீனம் இரண்டையும் அறிவேன். பலவீனங்களை உணர்ந்து சரிசெய்வேன் ☐

8. கோபம், எரிச்சல் போன்ற எதிர்மறை உணர்வுகள் எழும்போது?

அ. அடக்கி வைக்காமல் உடனடியாக வெளிப்படுத்தி விடுவேன் ☐

ஆ. சில நேரங்களில் நிதானம் காட்டுவேன். பெரும்பாலும் அப்படி இருக்க முடிவதில்லை ☐

இ. நிதானமாக சூழலை ஆராய்வேன். அந்த உணர்வுகள் என்னை ஆக்கிரமிக்க விடமாட்டேன் ☐

9. ஒரு பழக்கத்தை மாற்ற வேண்டும் என்று முடிவெடுத்தால்?

அ. ஒன்றிரண்டு நாட்கள் முயற்சி செய்வேன். முடியாவிட்டால் விட்டுவிடுவேன் ☐

ஆ. சின்னச் சின்ன இலக்குகள் வைத்து தொடர்ந்து முயற்சி செய்தபடி இருப்பேன் ☐

இ. பழகிய எதையும் சரியில்லை என்றால் மாற்ற வேண்டும். உடனே மாற்றிக்கொள்வேன் ☐

10. ஒருவர் செய்வது தவறு என்று நிச்சயமாகத் தெரிகிறது. என்ன செய்வீர்கள்?

அ. அது என்னை பாதிக்காது என்றால் அமைதியாக இருந்துவிடுவேன் ☐

ஆ. தவறை சுட்டிக் காட்டுவேன். அவர் மாறவில்லை என்றால் விட்டுவிடுவேன் ☐

இ. அதைத் தவறு என்பதோடு நிறுத்தாமல், அதன் பாதிப்புகளை விளக்குவேன். சரியாகச் செய்யவும் வழிகாட்டுவேன் ☐

11. நீங்கள் எப்போது மகிழ்ச்சியாக இருப்பீர்கள்?

அ. வீட்டில் இருக்கும்போது ☐

ஆ. நண்பர்களுடன் பொழுதுபோக்கும்போது ☐

இ. எல்லா இடங்களிலும் என் மகிழ்ச்சி என்னிடமே இருக்கும் ☐

12. ஒரு நாளின் முடிவில் என்ன நினைப்பீர்கள்?

அ. எதையும் யோசிக்காமல் தூங்கிவிடுவேன் ☐

ஆ. அன்றைய முக்கிய நிகழ்வுகளை நினைத்துப் பார்ப்பேன் ☐

இ. எது சிறப்பாக நடந்தது, எதை மேம்படுத்தலாம் என்று அலசுவேன் ☐

நீங்கள் யார்?

மேற்கண்ட உங்கள் விடைகளில், 'அ' எனப் பதில் அளித்திருந்தால் 0 புள்ளிகள், 'ஆ' எனப் பதில் அளித்திருந்தால் 5 புள்ளிகள், 'இ' எனப் பதில் அளித்திருந்தால் 10 புள்ளிகள் என மதிப்பிடுங்கள். 12 கேள்விகளுக்கும் பதில் அளித்தபின் மொத்த புள்ளிகளைக் கூட்டுங்கள்.

உங்கள் மதிப்பெண் 40-க்கும் மேற்பட்டால்: சரியாக உங்களைப் பிரதிபலிக்கும் பதில்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். நீங்கள் எல்லாவற்றையும் எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் உடையவர். நீங்கள் இயல்பாகவே அன்பு நிறைந்தவர்களாகவும் பழகுவதற்கு இனியவர்களாகவும் இருப்பீர்கள்.

மதிப்பெண் 21 முதல் 80 வரை மேற்பட்டால்: சிலவற்றைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவது நல்லது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். சரியான முடிவுகளை எடுக்கும் திறன் உங்களிடம் இருக்கிறது. சிலவற்றை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் உங்களிடம் இருக்கிறது.

மதிப்பெண் 80-க்கு மேல் வரை: நீங்கள் ஒரு சுயபரிசோதனையாளர். நீங்கள் எதிர்பார்ப்புகளை குறைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு மற்றவர்கள் இருப்பதில்லை. நீங்களும் மற்றவர்களைப் போல சராசரி மனிதர்தான் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஓட்டப்பந்தயம் ஒன்று நடைபெற்றது. முதல் மூன்று இடங்களைப் பிடிப்பதற்கு வேகமாகப் பலரும் ஓடினார்கள். ஒருவரால் அவர்களுடன் போட்டி போட முடியவில்லை. பின்தங்கிய அவர், மைதானத்தில் கடைசியாக ஓடிக்கொண்டிருந்தார். அவரைப் பார்த்து சிலர் சிரித்தார்கள். அதற்கெல்லாம் கவலைப்படாமல் அவர் தொடர்ந்து ஓடினார்.

அவர் கடைசி ஆளாக எல்லைக்கோட்டைத் தொட்டபோது சிலர் கைதட்டினர். "நீங்கள் வெற்றி பெறப்போவதில்லை என்று தெரிந்தும் ஏன் ஓடினீர்கள்?" என்று ஒருவர் அவரிடம் கேட்டார். அதற்கு அவர் சிரித்தபடி, "நான் மற்றவர்களுடன் போட்டியிடவில்லை. நேற்றைய என்னுடன் போட்டியிட்டு ஜெயித்தேன்" என்று சொன்னார்.

நல்ல நிர்வாகி என்பவர் போட்டியாளர்களை மட்டும் கவனிக்க மாட்டார். தொடர்ந்து தன்னை மேம்படுத்திக் கொள்வார். நிர்வாக முறையில் பல வகைகள் உலகெங்கும் பின்பற்றப்படுகின்றன. தனிநபர் தன்னை நிர்வாகம் செய்வது, குடும்பத்தை நிர்வாகம் செய்வது, தொழில் அல்லது வேலையை நிர்வாகம் செய்வது என எல்லாவற்றுக்கும் அவை உதவும். அவற்றை இங்கே பார்க்கலாம்:

அறிவியல்பூர்வ நிர்வாகம்: நிர்வாகத்தில் அறிவியல்பூர்வமான அணுகுமுறை வேண்டும் என ஃபிரடெரிக் டெய்லர் என்பவர் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தினார். ஒரு வேலையை ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டம் போல செய்யாமல், அதற்கு ஒரு சிறந்த நடைமுறையை உருவாக்குவதே அறிவியல் மேலாண்மையின் அடிப்படை. அறிவியல்ரீதியாக பயிற்சி அளித்தால், வேலைகளைச் சுலபமாகச் செய்யலாம், உற்பத்தியும் அதிகரிக்கும் என்று அவர் சொன்னார்.

ஆட்சிமுறை நிர்வாகம்: ஹென்றி ஃபாயல் என்பவர் இந்த முறையை உருவாக்கினார். ஒருவர் எந்த வேலையைச் சிறப்பாகச் செய்வாரோ அதையே அவருக்குக் கொடுப்பது, அந்த வேலைக்கு அவரைப் பொறுப்பேற்கச் செய்வது, ஒரே ஒரு மேலதிகாரி மட்டுமே அவர்களுக்கு உத்தரவு கொடுப்பது, ஒரு வேலையை இணைந்து செய்யும் எல்லோரும் ஒரே இலக்குடன் பணிசெய்வது, எல்லோரையும் சமமாக நடத்துவது, வேலையைப் பெருமையுடன் செய்யும் நிலையில் எல்லோரையும் வைத்திருப்பது போன்றவை இந்த முறையின் அடிப்படைகள்.

அதிகார நிர்வாகம்: ஜெர்மனி சமூகவியல் அறிஞர் மேக்ஸ் வெபர் உருவாக்கிய நிர்வாக முறை இது. "பொறுப்புகளை ஒருவரின் அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் கொடுப்பது, வேலையில் என்ன எதிர்பார்க்கிறோம் என்பதைத் தெளிவாக



நிர்வாகத்தில் இத்தனை வகைகளா?

விளக்குவது, கடுமையான விதிகளை உருவாக்குவது, பாரபட்சம் இல்லாமல் எல்லோரையும் நடத்துவது, திறமைசாலிகளுக்குப் பரிசுகள் கொடுப்பது, சரியாக வேலை செய்யாதவர்களைத் திருத்துவது போன்றவை மூலம் நிர்வாக மாற்றத்தை ஏற்படுத்தலாம்" என்றார் அவர்.

நல்லுறவு நிர்வாகம்: இது ஆஸ்திரேலிய உளவியல் அறிஞர் ஜார்ஜ் எல்டன் மேயோ உருவாக்கிய நிர்வாக முறை. "ஒரு நிறுவனத்தில் வேலை பார்க்கும் அத்தனை பேரிடமும் நல்லுறவு ஏற்படுத்த வேண்டும். தனிப்பட்ட கவனம் செலுத்தி ஒவ்வொருவர் நலனிலும் அக்கறை காட்டினால், அவர்கள் எல்லோருமே தங்கள் சொந்த நிறுவனம் போல நினைத்து வேலை பார்ப்பார்கள்" என்று அவர் சொன்னார்.

அமைப்பு நிர்வாகம்: ஒரு சிறிய கடை என்றாலும் அங்கே பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், பொருட்களை விநியோகம் செய்பவர்கள் என்று நிறைய பேரின் ஒருங்கிணைப்பு தேவைப்படும். இப்படி ஒரு சிஸ்டத்தில் இருக்கும் எல்லா மனிதர்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதே இந்த நிர்வாக முறை.

சூழலுக்கு ஏற்ற நிர்வாகம்: ஃபீட்லர் என்பவர் 1960களில் உருவாக்கிய நிர்வாக முறை இது. 'வெயில் நாட்களில் இருப்பது போல நாமோ, இயற்கையோ மழை நாட்களில் இருப்பதில்லை. எல்லாமே மாறும் எனும்போது, எந்த விதியையும் இறுக்கமாகப் பின்பற்ற வேண்டாம். ஒரு சூழல் மாறும்போது நம் தேவைகள் மாறும். அதற்கு ஏற்றபடி நிர்வாகத்தின் அணுகுமுறை மாற வேண்டும்' என்று அவர் சொன்னார். மார்க்கெட் சூழலுக்கு ஏற்றபடி நாம் மாறினால்தான் எப்போதும் வளர்ச்சியை அடைய முடியும் என்றார் அவர்.

X மற்றும் Y நிர்வாகம்: சமூக உளவியலாளர் டக்ளஸ் மெக்கிரிகோர் அறிமுகம் செய்த நிர்வாக முறை இது. 'எல்லா இடங்களிலும் இரண்டுவிதமான மனிதர்கள் இருப்பார்கள். விருப்பம் இல்லாமல் வேலை பார்க்கும் மகிழ்ச்சியற்ற மனிதர்களை X முறைப்படி அதிகாரம் செய்து வேலை வாங்க வேண்டும். ஆர்வமும் அர்ப்பணிப்பும் பொறுப்புணர்வுமாக வேலை பார்க்கும் மனிதர்களை Y முறைப்படி அன்பு காட்டி இணைந்து வேலை வாங்க வேண்டும். இந்த இரண்டும் இணையும்போது சிறந்த நிர்வாகம் நடக்கும்' என்றார் அவர்.

மரபுசார்ந்த நிர்வாகம்: நவீனத் தொழில்கள் ஆரம்பித்த காலத்தில் உருவான நிர்வாக முறை இது. 'நல்ல சம்பளம், போனஸ் என்று தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் பலன்களைத் தந்துகொண்டே இருந்தால், அவர்கள் நன்கு வேலை பார்த்து நிறுவனத்துக்கு லாபம் தேடித் தருவார்கள். அவர்களைக் கண்காணிக்க நல்ல



ஏற்பாடு அவசியம் வேண்டும்' என்ற இந்தப் பழங்கால நிர்வாக முறை இப்போது எங்கும் பயன்படுவது இல்லை.

நவீன நிர்வாகம்: மரபுசார்ந்த நிர்வாகத்துக்கு எதிர்மறையான முறை இது. 'வெறும் பணத்தை மட்டுமே எதிர்பார்த்து யாரும் வேலை செய்வது இல்லை. அதைத் தாண்டி ஒரு வேலையில் அவர்களுக்குத் திருப்தி, மகிழ்ச்சி எல்லாம் கிடைக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கைமுறைக்கு அந்த வேலை உதவி செய்ய வேண்டும். இதையெல்லாம் புரிந்துகொண்டு எவரையும் நிர்வாகம் செய்ய வேண்டும்' என்பது இந்த முறையின் அடிப்படை.

அளவுசார்ந்த நிர்வாகம்: எந்த ஒரு விஷயத்திலும் தகவல்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கச் சொல்லும் நிர்வாக முறை இது. 'மனிதர்கள் பொய் சொல்லலாம், ஆனால் தகவல்கள் பொய் சொல்லாது. நமக்குக் கிடைக்கும் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் கணித்து முடிவெடுப்பது சிறந்த விளைவுகளைத் தரும்' என்று வலியுறுத்தும் இந்த நிர்வாக முறை, இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் உருவானது.

முழுமையான நிர்வாகம்: ஒரு நிறுவனத்தின் எல்லா பிரிவுகளையும் இணைத்து முழுமையாக ஒரே இலக்குடன் பணி செய்ய வைக்கும் நிர்வாக முறை இது. எந்தத் தகவல்தொடர்பும் விடுபடாமல் எல்லோருக்கும் போய்ச் சேர்ந்தால் வேலை ஒழுங்காக நடக்கும் என்பது இந்த முறையின் அடிப்படை.

திறன் மேம்பாட்டு நிர்வாகம்: 'ஒரு நிறுவனத்தில் ஒவ்வொரு பணியாளரும் மதிப்புமிக்க சொத்து. அவர்களின் தனிப்பட்ட திறன்களை மேம்படுத்திக்கொள்ள நிர்வாகம் உதவ வேண்டும். அதனால் அவர்களின் திறன் நிறுவனத்துக்கு உதவும்' என்பதை அடிப்படையாகக் கொண்ட இந்த முறையை பீட்டர் ட்ரக்கர் என்பவர் உருவாக்கினார். ●



பண நிர்வாகம் பழகுங்கள்!

இன்று உலகின் டாப் நிறுவனங்களில் ஒன்று, ஆப்பிள். இந்த நிறுவனத்தின் மதிப்பு சுமார் 474 லட்சம் கோடி ரூபாய். இந்த நிறுவனத்தில் 10% மதிப்பு என்றால் சுமார் 47 லட்சம் கோடி ரூபாய். 50 ஆண்டுகளுக்கு முன்பு வெறும் 500 டாலருக்காக இதை அவசரப்பட்டு இழந்த ஒரு மனிதரை உங்களுக்குத் தெரியுமா?

1976–ம் ஆண்டு ஸ்டீவ் ஜாப்ஸ், ஸ்டீவ் வோஸ்னியாக் ஆகிய இருவரும் இணைந்து ஆப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்தனர். இந்த இருவரையும் தாண்டி மூன்றாவதாக ஒருவர் இருந்தார். அவர், ரொனால்டு வேய்ன். சின்னப் பையன்களாக இருந்த ஸ்டீவ் ஜாப்ஸ், ஸ்டீவ் வோஸ்னியாக் இருவருமே தங்களுக்கு அனுபவசாலி ஒருவர் தேவை என்று ரொனால்டைக் கூப்பிட்டனர். இருவரும் தலா 45% பங்குகளை வைத்துக்கொண்டு அவருக்கு 10% பங்கு கொடுத்தனர். ஆப்பிள் நிறுவனத்தின் முதல் லோகோ, நிறுவனத்துக்கான சட்ட விதிகள், ஆப்பிள் கம்ப்யூட்டருக்கான கையேடு என்று எல்லாவற்றையும் உருவாக்கியவர் ரொனால்டு வேய்ன்.

ஆனால், நிறுவனத்தை ஆரம்பித்த சில நாட்களிலேயே அவருக்கு மற்ற இருவரையும் பிடிக்காமல் போனது. கடன் வாங்குவது, பொருட்கள் வாங்குவது என்று ஸ்டீவ் ஜாப்ஸ், ஸ்டீவ் வோஸ்னியாக் நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு, "என்னால் உங்களுடன் இணைந்து தொழில் செய்ய முடியாது" என்று சண்டை போட்டார். அவரது 10% பங்குகளை மற்ற இரண்டு பேரும் 500 டாலர் கொடுத்து வாங்கிக்கொண்டனர். ஒருவேளை அவர் அவசரப்படாமல் இருந்திருந்தால், இன்று உலகின் டாப் 500 பணக்காரர்கள் பட்டியலில் அவரும் இருந்திருப்பார். முதலீடு விஷயத்தில் பொறுமை அவசியம் என்று இதற்காகத்தான் சொல்கிறார்கள்.

முதலீடுகள் விஷயத்தில் அவசரம் காட்டக்கூடாது என்பதைப் போலவே ஆடம்பரச் செலவுகளிலும் அவசரம் காட்டக்கூடாது. இதற்கு உதாரணம், வசந்த்.

புகழ்பெற்ற கல்வி நிறுவனத்தில் நிர்வாகவியல் படித்த அவருக்கு ஒரு பெரிய ஹோட்டலில் முன்பதிவு மேனேஜர் வேலை கிடைத்தது. முதல் வேலையே மிகப்பெரிய ஹோட்டலில், அதுவும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை நிர்வாகம் செய்யும் வேலை என்பதில் வசந்த் உற்சாகமானார். முதல் நாள் வேலைக்குப் போனதுமே, 'இவ்வளவு பெரிய ஹோட்டலின் மேனேஜர் நான். எனக்கு மேலே இருக்கும் ஜெனரல் மேனேஜர் ஆடம்பரக் காரில் வருகிறார். என்னைப் போன்ற சக மேனேஜர்கள் எல்லோரும் காரில் வருகிறார்கள். நான் பைக்கில் வேலைக்கு வந்தால் மதிப்பு கிடைக்குமா?' என்ற எண்ணம் எழுந்தது.

உடனே கார் லோனுக்கு விண்ணப்பம் செய்தார். ஆனால், அப்பா அவரை எச்சரித்தார். "ஒரு வேலையில் சேர்ந்ததும் நீ முதலில் செய்ய வேண்டியது சேமிப்புதான். அவசரத் தேவைகளுக்காக முதலில் கொஞ்சம் பணம் சேர்த்துக்கொள். அதன்பின் கார் வாங்கலாம்" என்றார். ஆனால் வசந்த் அதைக் கேட்கவில்லை. "உங்கள் காலம் மாதிரி இப்போது இல்லை அப்பா. கடன் சுலபமாகக் கிடைக்கும்போது கார் வாங்குவதில் என்ன தப்பு?" என்று சொல்லிவிட்டு கார் வாங்கினார்.

நான்கைந்து மாதங்களில் திடீரென கொரோனா தொற்று வந்து உலகமே முடங்கியபோது முதலில் பாதிக்கப்பட்டது ஹோட்டல் தொழில்தான்! சிக்கன நடவடிக்கையாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் பட்டியலில் வசந்த்தும் இருந்தார். யாருமே கற்பனை செய்து பார்க்கமுடியாத சூழல். வசந்த் நிலைகுலைந்து போனார். சேமிப்பு எதுவும் கைவசம் இல்லை என்பதால், கார் கடனுக்கு அடுத்த மாத தவணையையே கட்ட முடியாமல் தடுமாறினார். கடைசியில் காரை விற்று கடனை அடைக்க வேண்டிய நிலை வந்தபோது, அப்பா சொன்ன அறிவுரையின் அர்த்தம் அவருக்குப் புரிந்தது.

பண நிர்வாகம் தொடர்பான சில விதிகளை அறிந்தால் இந்த பாதிப்புகளைத் தவிர்க்கலாம். அவை:

- **7–7–7 விதி:** நிதி நிர்வாகத்தில் முக்கியமான விதி. அதாவது, ஒருவரின் மாதக் கடன் தவணைகளைப் போல ஏழு மடங்கு அவர் சம்பாதிக்க வேண்டும். அதாவது, வாகனக் கடன், பர்சனல் லோன் என்று மாதம் ஒருவர் 20 ஆயிரம் தவணை கட்டுகிறார் என்றால், அவரது வருமானம் 1,40,000 ரூபாயாக இருக்க வேண்டும். அதேபோல மாத வருமானத்தில் குறைந்தபட்சம் 7% தொகையை ஒருவர் சேமிக்க வேண்டும். வீட்டின் மாதாந்திர அத்தியாவசிய செலவு எவ்வளவு என்று பார்த்து, அதேபோல் ஏழு மடங்கு தொகையை அவசர செலவுகளுக்கான கையிருப்பாக வைத்திருக்க வேண்டும்.
- **50/30/20 விதி:** பட்ஜெட் தொடர்பான விதி இது. இதன்படி ஒருவர் தன் வருமானத்தில் 50% தொகையை அத்தியாவசிய வாழ்க்கைத் தேவைகளுக்கு செலவிடலாம். 30% தொகையை ஆடம்பரம், வாழ்க்கைத்தரம் மாற்றும் பொழுதுபோக்குகளுக்கு செலவிடலாம். 20% தொகையை சேமிக்க வேண்டும்.
- **3 – 6 – 9 விதி:** குடும்பத்தின் அவசரத் தேவைகளுக்கான கையிருப்பு தொடர்பான விதி இது. நிலையான மாத வருமானம் உள்ளவர்கள் தங்கள் குடும்பத்தின் மாதச் செலவு எவ்வளவோ அதேபோல் 3 மடங்கு தொகையை வைத்திருக்க வேண்டும். வருமானத்தில் ஏற்ற இறக்கம் உள்ளவர்கள், குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோருடன் வசிப்பவர்கள், கடன்களுக்கு மாதத்தவணை கட்டுபவர்கள் போன்றோர் 6 மாதச் செலவுகளுக்கான தொகையை வைத்திருப்பது நல்லது. சிறிதாக சுயதொழில் செய்பவர்கள், நிலையற்ற வருமானம் உள்ளவர்கள் போன்றோர் 9 மாதச் செலவுகளுக்குக் கையிருப்பு வைத்திருப்பது நல்லது.
- **60/40 பட்ஜெட் விதி:** குடும்ப பட்ஜெட் எப்படிப் போடுவது என்பது தொடர்பான விதி இது. குடும்பத் தேவைகள், கடன் தவணைகள், வரி, மருத்துவச் செலவு, இன்சூரன்ஸ் பிரீமியம் போன்றவை பட்ஜெட்டில் 60% அளவு இருக்கலாம். குறுகிய கால சேமிப்பு, ஓய்வுக்கால சேமிப்பு, ஆடம்பரத் தேவைகள், கேளிக்கை செலவுகள் போன்றவை 40% இருக்கலாம்.
- **7 நாள் விதி:** எந்த ஒரு பொருளையும் வாங்க வேண்டும் என்ற ஆசை எழும்போது, அந்த ஆசையை 7 நாட்களுக்குத் தள்ளிவையுங்கள். அதன்பின்னும் அது அவசியம் என்று தோன்றினால் மட்டும் வாங்குங்கள்.
- **40% தவணை விதி:** ஒருவரின் மாதாந்திர கடன் தவணைகள், கிரெடிட் கார்டு பில்லுக்கான கட்டணம் ஆகியவை அவருக்கு மாதா மாதம் கையில் கிடைக்கும் வருமானத்தில் 40% அளவைத் தாண்டக்கூடாது.
- **இன்சூரன்ஸ் விதி:** ஒருவர் தன் ஆண்டுவருமானம் போல குறைந்தபட்சம் 10 மடங்கு தொகைக்கு ஆயுள் காப்பீடு செய்திருக்க வேண்டும்.

இவற்றில் எந்த விதி உங்களுக்குப் பொருந்துமோ, அதைப் பின்பற்றுங்கள்! ●



அவர்கள் அப்படித்தான்!

- வெளியில் எங்காவது குடும்பத்துடன் போய்விட்டு வீடு திரும்பியதும் சாவியைப் போட்டு கதவைத் திறக்கும் மனைவி, அந்த சாவியைக் கதவிலேயே மறந்து விட்டுவிடுவார். இரவு தூங்கப் போகும் நேரத்தில் அதைப் பார்த்துவிட்டு மனைவியைத் திட்டுவார் கணவர்.
- காலையில் வேலைக்குக் கிளம்புவதற்கு அவசரமாகக் குளித்துவிட்டு தலை துவட்டும் கணவர், அந்த ஈர டவலை அப்படியே ஹால் சோபாவில் போட்டுவிடுவார். சமையல் வேலைகளை முடித்துவிட்டு ரிலாக்ஸாக சோபாவில் உட்கார வரும்போது மனைவி அதை கவனிப்பார். அந்த ஈரத்தால் சோபா அழுக்காகி இருக்கும்.
- ஒரு நண்பர் எந்த அவசரச் சூழலில் போன் செய்தாலும் போனை எடுக்க மாட்டார். ஐந்தாறு மணி நேரம் கழித்து திரும்ப போன் செய்து, "சாரி, போனை சைலன்ட்ல போட்டிருந்தேன்" என்பார்.

இப்படி வீட்டிலும் பணியிடத்திலும் பல விஷயங்கள் அடிக்கடி நடக்கும். நாம் நூற்றுக்கணக்கான தடவை 'இதை இப்படிச் செய்யாதே' என்று திரும்பத் திரும்பச் சொன்னாலும், அவர்கள் அதே தவறைத் திரும்பத் திரும்பச் செய்துவிட்டு, 'சாரி, தெரியாம நடந்துடுச்சு' என்று சமாதானம் சொல்வார்கள். இதை 'எதிர்பார்ப்புக்கும் உண்மைக்குமான இடைவெளி' என்று உளவியல் நிபுணர்கள் சொல்வார்கள்.


ஒரு தவறு ஒரு முறை நிகழ்ந்தால் அதைத் 'தவறு' என்று சொல்லலாம். தான் செய்தது தவறு என்பதை உணர்ந்து அவர் திருத்திக்கொள்வார். அதே விஷயமே திரும்பத் திரும்ப நடைபெற்றால், அது 'பழக்கம்'. அந்தப் பழக்கத்தை மாற்றுவது கடினம். "அவர் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் எதிர்பார்த்து, சண்டை போட்டு, திருத்த முயன்று எரிச்சல் அடைவதைவிட, 'அவர் அப்படித்தான்' என்று ஏற்றுக்கொள்ளுங்கள். தேவையற்ற மன உளைச்சல் ஏற்படாது" என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.


ஏனெனில், இதுபோன்ற தருணங்கள்தான் பலரையும் தினம் தினம் எரிச்சலில் மூழ்கச் செய்கிறது. பஸ்ஸில் பக்கத்தில் உட்கார்ந்து தூங்கி வழிபவர், ரயிலில் சத்தமாக போனில் பேசுபவர், வியாபாரம் அல்லது தொழிலில் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பக் கேட்கும் வாடிக்கையாளர் போன்ற மனிதர்கள் நாம் எப்போதாவது சந்திப்பவர்கள். அவர்கள் ஏற்படுத்தும் எரிச்சல் தற்காலிகமானது, அது தொடராது.

ஆனால், உறவுகள், நண்பர்கள், அலுவலகத்தில் சக பணியாளர்கள் போன்றவர்கள் நாம் தினம் தினம் சந்திப்பவர்கள். அவர்களின் பழக்கம் நமக்கு எரிச்சல் ஏற்படுத்தினால், அதன்மீதுதான் கவனம் போகும். 'அவர்களை எப்படி மாற்றுவது' என்று யோசிப்பதைவிட, 'இந்த விஷயம் நம்மை பாதிக்காமல் தடுப்பது எப்படி' என்று யோசிக்கலாம்.

மனைவி கதவைத் திறந்ததும், கணவர் ஞாபகமாக சாவியை எடுக்கலாம். 'சோபாவில் கிடக்கும் அப்பா டவலைக் காயப் போடு' என்று பிள்ளைகளைப் பழக்கலாம். இப்படிச் செய்யும்போது, 'இது ஒரு பிரச்சனை' என்றே நமக்குத் தோன்றாது. நம் நேரத்தை வேறு ஆக்கப்பூர்வமான விஷயங்களில் செலவிடலாம். மனித உறவுகளை நிர்வாகம் செய்வதில் இது அடிப்படையான ஒரு பாடம். ●


RAMYYAM®
SAREES • KURTIS
From the house of
RAMRAJ


RAMRAJ
COTTON
CULTURE OF INDIA
SWAMY
VASTRA SET


LINEN PARK®
SHIRTS • TROUSERS • FABRICS
by
RAMRAJ
PREMIUM
LINEN
CRAFTED FOR THE MODERN VOYAGE

mrithu®
super soft towels
by RAMRAJ©



RAMRAJ காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

வெண்மை

சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

ஓர் ஆண்டு சந்தா ரூ.200
இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

வெண்மை
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421–4304106, 98422 74137

ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code–ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

வங்கிக் கணக்கு விவரம்: Venmaii
A/C No: 1809135000000299
Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch
IFSC Code: KVBL0001809.



மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.



சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்



மன அழுத்தம் தவிர்க்கும் வேலைச்சூழல்!

இன்றைய சூழலில் எல்லோருக்குமே மன அழுத்தம் ஏற்படுகிறது. பல்வேறு நெருக்கடிகளும் பரபரப்பான வாழ்க்கைமுறையும் அதற்குக் காரணம். ஆனால், நம் சூழலை சரியாக நிர்வாகம் செய்வதன் மூலம், தேவையற்ற மன உளைச்சலைத் தவிர்க்கலாம். அதற்கு...

- உங்களால் இவ்வளவுதான் செய்ய முடியும் என்று கணக்கு இருக்கிறது. அதற்குக் கூடுதலாக வேலைகளை ஒப்புக்கொள்ளாதீர்கள். தயக்கமின்றி 'நோ' சொல்லி விடுங்கள்.
- சில மனிதர்கள் தங்கள் பேச்சாலேயே ஏதேதோ பிரச்சனைகளை ஞாபகப்படுத்தி மன உளைச்சலை ஏற்படுத்துவார்கள். அவர்களைத் தவிர்த்து விடுங்கள்.
- சமூக வலைதளங்கள் பார்ப்பது, மோசமான செய்திகளைப் படிப்பது என்று சில செயல்கள் மன உளைச்சலை அதிகரிக்கும். எந்த செயல் உங்கள் மன உளைச்சலை அதிகமாக்குகிறதோ, அதைத் தவிர்த்துவிடுங்கள்.
- அரசியல், விளையாட்டு தோல்வி, மதம் என்று சில குறிப்பிட்ட விஷயங்கள் குறித்து விவாதம் செய்வது சிலருக்கு மன உளைச்சலை உருவாக்கும். அதுபற்றிய விவாதங்களைத் தவிர்த்து விடுங்கள்.
- உங்கள் தினசரி வேலைகளை கவனியுங்கள். சில குறிப்பிட்ட வேலைகள் அதிக நேரத்தை எடுத்துக்கொண்டு மன உளைச்சலை உருவாக்கும். அவற்றை சீக்கிரம் முடிப்பதற்கு வழி தேடுங்கள்.



சிறந்த நிர்வாகிகள் எப்படி இருப்பார்கள்?

- மற்றவர்கள் எப்படி உழைக்க வேண்டும் என்பதை உணர்த்தும் ரோல் மாடலாக இருப்பார்கள்.
- ஒவ்வொரு நாளும் செய்யும் வேலைகள் எப்படி ஒரு பெரிய இலக்கை நோக்கி நம்மை முன்னேற்றிச் செல்லும் என்பதை உணர்ந்திருப்பார்கள்.
- எல்லோரது ஒட்டுமொத்த நம்பிக்கைக்கு உரியவராக இருப்பார்கள். அவர்களின் வார்த்தைக்கு எல்லோரும் மந்திரம் போல கட்டுப்படுவார்கள்.
- வெற்றிகள் வரும்போதும், பிரச்சனைகளை சந்திக்கும்போதும் ஒரே மாதிரி இருப்பார்கள்.
- யாரிடமும் பாரபட்சம் காட்ட மாட்டார்கள்.



எலிவால் நிர்வாகம்!

வியட்நாம் நாட்டை 19–ம் நூற்றாண்டில் பிரெஞ்சு அரசு ஆண்டது. அப்போது வியட்நாம் தலைநகரான ஹனோய் நகரில் பெரும் எலித்தொல்லை நிலவியது. பிளேக் நோய் வந்தது. அதனால் எலிகளைக் கொல்பவர்களுக்கு பரிசு தருவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால், கொல்லப்பட்ட எலிகளைக் கையாள்வதற்கு பிரெஞ்சு அதிகாரிகள் பயந்தனர். அதனால், எலியின் வாலைக் காட்டினாலே பரிசு தருவதாக அறிவித்தனர்.

மக்கள் அதைவிட புத்திசாலிகளாக இருந்தனர். எலிகளைக் கொல்லாமல், அவற்றின் வாலை மட்டும் வெட்டி எடுத்துவந்து காட்டி பரிசு வாங்கிப் போனார்கள். வாலை இழந்த எலிகள் மீண்டும் குட்டி போட்டு நிறைய எலிகளை உற்பத்தி செய்தன. அவற்றின் வால்களை மக்கள் வெட்டி எடுத்துப் போனார்கள். எலிகளைக் கொன்றால் புதிய குட்டிகளின் வால் கிடைக்காது என்பதால், மக்கள் எலிகளைப் பாதுகாத்தனர். ஒரே ஆண்டில் பார்த்தால், முன்பைவிட எலித்தொல்லை அதிகரித்திருந்தது.

ஒரு நிர்வாகத்தில் எதற்காக முடிவை எடுக்கிறோம், அதை எப்படி அமல் செய்வது என்ற தெளிவு இல்லாமல் போனால் வெற்றி கிடைக்காது. அதற்குப் புகழ்பெற்ற உதாரணமாக, இந்த 'எலிவால் நிர்வாகம்' ஆகிவிட்டது.





உயரத்தில் இருந்தால்...

உயரமான மரக்கிளை ஒன்றில் சும்மா உட்கார்ந்திருந்தது ஒரு கழுகு. அதையே நீண்ட நேரம் பார்த்தபடி இருந்தது ஒரு குட்டி முயல். அந்தக் கழுகு பறந்து கீழே வந்தபோது, "இவ்வளவு நேரம் நீ சும்மாவே உட்கார்ந்து இருந்தாயே, உன்னை மாதிரி நானும் இருக்க முடியுமா?" என்று கேட்டது முயல். கழுகு சிரித்தபடி, "இதையெல்லாம் முயற்சி செய்யாதே, ஆபத்தில் மாட்டிக் கொள்வாய்" என்று எச்சரித்துவிட்டுப் போனது.

முயல் கேட்கவில்லை. ஒரு மண்மேட்டில் ஏறி அமர்ந்து சும்மா இருந்தது. சாமர்த்திய நரி ஒன்று பின்பக்கமாக வந்து தாக்கி முயலைக் கவ்விக்கொண்டு போனது. உயரத்தில் இருப்பது ஆபத்தானது என்பதை உணர்ந்துகொண்டது முயல்.

முதலாளியோ, மேனேஜரோ சும்மா உட்கார்ந்து நிறைய சம்பாதிப்பதாக கீழ்நிலையில் இருப்பவர்கள் நினைக்கலாம். சும்மா இருப்பது போலத் தெரியும் அவர்கள் எடுக்கும் முடிவுகள்தான் ஒரு நிறுவனத்தை உயர்த்துகின்றன என்பதை உணர வேண்டும்.

யார் முதலில் பேசுவது?



ஒரு மேனேஜரும், இரண்டு ஊழியர்களும் ஒரு முக்கியமான வேலையைச் செய்துகொண்டிருந்தார்கள். அந்த நாளுக்குள் வேலையை முடித்தாக வேண்டும். இரவு உணவை முடித்துவிட்டு வேலையைத் தொடரலாம் என்று சாப்பிட வந்தார்கள். அப்போது சாலையோரத்தில் கிடந்த பழங்கால விளக்கு ஒன்று அவர்கள் கண்ணில் பட்டது.

அதை எடுத்து ஒரு ஊழியர் திறந்து பார்க்க, அதற்குள்ளிருந்து பூதம் ஒன்று வெளிப்பட்டது. ''விளக்கில் சிறைபட்டுக் கிடந்த என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி. உங்கள் மூவருக்கும் ஆளுக்கு ஒரு வரம் தருகிறேன். என்ன வேண்டும், கேளுங்கள்" என்றது. "பொள்ளாச்சி பக்கம் பெரிய தோப்பும் ஒரு பண்ணை வீடும், அதில் சகல வசதிகளும் வேண்டும்" என்று ஊழியர் ஒருவர் கேட்டார். அடுத்த நிமிடமே அவருக்கு எல்லாமும் கொடுத்து பொள்ளாச்சி அனுப்பியது பூதம். இன்னொரு ஊழியர் அதே வசதிகளைக் கேரளாவில் கேட்டார். அவருக்கும் கிடைத்தது. இருவரும் அங்கிருந்து மறைந்ததும், மேனேஜர் கடுப்பாகிவிட்டார். அவரிடமும் 'என்ன வரம் வேண்டும்' என்று கேட்டது பூதம். "வேலையை இன்னைக்கு முடிக்கணும். அந்த ரெண்டு பேரும் உடனே இங்கே வந்தாகணும்" என்றார். ஊழியர்களை மீண்டும் அங்கே வரவழைத்துவிட்டு, பூதம் மறைந்தது.

கதை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இது சொல்லும் நீதி முக்கியமானது. எந்த சூழ்நிலையிலும், மேலதிகாரியின் கருத்தை முதலில் கேட்டுவிட்டு அதன்பிறகு கருத்து சொல்வது நல்லது என்பதே அது!

ஒரு நிறுவனத்தில் புதிய மேலாளர் பொறுப்புக்கு வந்தார். முதல் நாளே அவர் அனைத்து ஊழியர்களையும் சந்தித்து, "உங்களுக்கு ஏதாவது பிரச்சனை இருக்கிறதா?" என்று கேட்டார். பலரும் தங்கள் பிரச்சனைகளைச் சொன்னார்கள். அவர் உடனடியாக எந்த முடிவையும் எடுக்கவில்லை.

மூன்று நாட்கள் கழித்து மீண்டும் அனைவரையும் அழைத்தார். "நீங்கள் சொன்ன விஷயங்களைப் புரிந்துகொள்ள நான் முதலில் உங்கள் வேலையைச் செய்து பார்க்க வேண்டும்" என்றார். அதன்பின் ஒரு வார காலம் அவர் பிற ஊழியர்களுடன் இணைந்து வேலை செய்தார். அதைத் தொடர்ந்து மாற்றங்களைச் செய்தார். அதன் விளைவாக உற்பத்தி வேகமாக உயர்ந்தது.

அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்பதற்கும், நாமே நேரடியாக உணர்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. வேலை, தொழில், வியாபாரம், குடும்ப நிர்வாகம் என எதிலும் பல பேரின் கூட்டு முயற்சி தேவைப்படுகிறது. அதில் ஒவ்வொருவரும் தங்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்ள வேண்டும். தங்கள் பொறுப்பு, இலக்கு, அதைச் செய்வதில் தங்களுக்கு இருக்கும் திறமை என்று எல்லாவற்றையும் அறிந்தவர்களால்தான் வேலைகளைச் சரியாகச் செய்துமுடிக்க முடியும்.

முக்கியமான ஒரு வேலையை முடிக்க வேண்டிய நேரத்தில் மனம் சலனப்பட்டு பொழுதுபோக்கை நாடுகிறதா? பெரும்பாலான வேலைகளைக் குறித்த நேரத்தில் முடிக்க முடியாமல் தடுமாறுகிறீர்களா? ஒரு வேலையை சரியாக முடிக்கவில்லை என்ற உணர்வு உங்களுக்கு ஏற்படுகிறதா? உங்களுக்கு சுய நிர்வாகம் தேவை என்பதை உணர்த்தும் விஷயங்கள் இவை.

நிர்வாகத் திறமை பெறுவதற்கு முதலில் சில விஷயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்வது நல்லது.

- ஒருவர் தான் செய்யும் வேலை பற்றி முழுமையாக அறிய வேண்டும். அந்த வேலையில் தன்னுடைய பொறுப்பு என்ன, எந்த அளவுக்கு நிறுவனம் தன்னைச் சார்ந்து இருக்கிறது, தான் வேலையை முடிக்க யாரையெல்லாம் சார்ந்திருக்கிறோம், தன் வேலை எப்படி மதிப்பிடப்படுகிறது என்று தெளிவு பெறுவது நல்லது.
- சுமார் 1,800 பாகங்களை இணைத்து ஒரு கார் உருவாகிறது. அதில் ஏதோ ஒரு பாகத்தை உருவாக்கும் ஒரு நபருக்கு அது வெறும் ஒரு ஸ்க்ரூ அல்லது தகடு என்று தெரியக்கூடாது. ஒரு சிறப்பான காரை உருவாக்கும் பணியை நாம் செய்கிறோம் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். உடன் வேலை செய்யும் எல்லோருடனும் இப்படி ஒரே இலக்கில் இணைந்திருக்க வேண்டும்.



நிர்வாகத் திறமையை வளர்க்கும் வழிகள்!

• சரியான திட்டமிடல் இருப்பது சிறப்பு. இலக்கை அடைவதற்கு நாம் வேலையை எப்படிச் செய்வது, எவ்வளவு நேரத்துக்குள் செய்வது, எதிர்காலத் தேவைகளுக்கு எப்படித் தயாராவது என்று எல்லாவற்றுக்கும் ஒருவர் கையில் தெளிவான பதில் இருக்க வேண்டும்.

• ஒரே நேரத்தில் பல வேலைகள் ஒருவர் கையில் இருக்கலாம். அவற்றில் எதை முதலில் செய்வது நல்லது என்ற தெளிவு இருந்தால்தான், அவசரமான வேலைகளை உடனே முடிக்க முடியும். இணைந்து வேலை செய்யும் எல்லோருக்குமே இந்தத் தெளிவு இருந்தால், சரியான காலக்கெடுவுக்குள் வேலைகள் முடியும்.

• ஒருவர் தன் சிந்தனைகள், ஆசைகள், பழக்கங்கள் என்று எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் அவரால் எந்த வேலையையும் சிறப்பாகச் செய்ய முடியும். இல்லாவிட்டால் தேவையற்ற ஆசையும், குழப்பமான சிந்தனையும் வேலைத்திறனைக் கெடுத்துவிடும்.

• பயத்துடன் ஒரு வேலையைச் செய்தால், அது சரியாக நடக்காது. வேலை நேரத்தில் எதற்காவது கோபப்பட்டால், அது வேலையைத் தவறாகச் செய்ய வைக்கும். எந்த எதிர்மறை உணர்வும் மனதை ஆக்கிரமிக்க அனுமதிக்கக்கூடாது. உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் மனவலிமை உள்ள ஒருவரே சிறப்பாக எதையும் செய்ய முடியும்.

சரி, இந்த எல்லா விஷயங்களையும் தெளிவுபடுத்திக்கொண்ட ஒருவர் தனது நிர்வாகத் திறமையை வளர்த்துக்கொள்வது எப்படி? அதற்கு இதையெல்லாம் செய்யுங்கள்:


1. சொன்ன சொல்லைக் காப்பாற்றுங்கள். ஒரு வேலையை ஒப்புக்கொள்வதற்கு முன்பு, அதைக் குறித்த நேரத்தில் சிறப்பாகச் செய்ய முடியுமா என்று யோசியுங்கள். உங்களால் முடியும் என்றால் மட்டுமே ஒப்புக்கொள்ளுங்கள். அதேபோல, எந்த வாக்குறுதியைக் கொடுத்தாலும், அதை நிறைவேற்றுங்கள்.
2. நாம் என்னதான் திட்டமிட்டு வேலைகளைச் செய்தாலும், சில விஷயங்கள் நம் கட்டுப்பாட்டில் இருக்காது. எனவே, எல்லாவற்றையும் கட்டுப்படுத்த நினைக்காதீர்கள். அது நமக்குத் தேவையற்ற மன உளைச்சலை ஏற்படுத்தும்.
3. 'எனக்கு நான் கேட்ட இதைக் கொடுக்காமல் இந்த வேலையைச் செய்யச் சொல்வது நியாயமா?', 'இப்படி ஒரே நாளில் இவ்வளவு வேலையை முடிக்கச் சொல்கிறீர்களே?' என்றெல்லாம் புலம்புவது அழகு இல்லை. ஒருவர் தன் வேலைகளை முடிக்க பிற



விஷயங்களை அதிகம் சார்ந்திருக்கக் கூடாது. தன்னை நம்பியே எந்த வேலையிலும் இறங்க வேண்டும்.

4. உங்கள் பலம் என்ன, திறன் என்ன என்பதை அறிந்துகொண்டு அதற்கு ஏற்றபடி வேலைகளைத் தேர்வு செய்யுங்கள். 'எல்லோரும் செய்கிறார்களே' என்று எதை எதையோ முயற்சி செய்யாமல், 'என்னால் நன்றாகச் செய்ய முடிகிற வேலையையே செய்வேன்' என்ற தீர்மானத்துடன் வேலை செய்யுங்கள். உங்களின் தனித்திறமைகளை மெருகேற்றிக்கொள்ளுங்கள்.
5. எந்த வேலையைச் செய்தாலும், அதை நேசித்து முழுமனதுடன் செய்யுங்கள். மனம் எங்கோ அலைபாய்ந்தபடி இருக்க, உடல் மட்டும் வேலை செய்தால், அந்த வேலை சிறப்பாக இருக்காது. ஒரு சிற்பி, தான் செதுக்கப் போகும் சிற்பத்தை மனதுக்குள் ஒருமுறை முழு உருவமாகக் கற்பனை செய்து பார்ப்பார். அதுபோன்ற கற்பனைத் திறன் இருப்பவர்கள் எந்த வேலையையும் சிறப்பாகச் செய்வார்கள்.
6. ஒரே நேரத்தில் பல வேலைகளை இழுத்துப் போட்டுக் கொள்ளாதீர்கள். அப்புறம் எதையும் முழுமையாகச் செய்ய முடியாது. அதேபோல, வேலைக்கு இடையில் போதுமான ஓய்வெடுங்கள். அது உங்களைப் புது வேகத்துடன் வேலை செய்ய வைக்கும்.
7. இந்த வேலையைச் செய்தால் எனக்கு இப்படி ஒரு பலன் கிடைக்கும் என்பது போல ஏதோ ஓர் எதிர்பார்ப்பு வைத்துக்கொண்டு எதையும் செய்யாதீர்கள். உங்கள் சக்தியும் கவனமும் முழுக்க முழுக்க வேலையில் மட்டுமே இருக்க வேண்டும். அதன் பலன்கள் மீது கவனம் வைத்தால், வேலையில் ஆர்வம் போகாது.





உங்களை சிறப்பாக நிர்வகிக்க 20 ஐயாக்கள்!





01

ஒவ்வொரு நாள் இரவிலும் தூங்கப் போவதற்குமுன்பு, அடுத்த நாளுக்கான வேலைகளைத் திட்டமிடுங்கள். மறுநாள் எழும்போது வெற்றுக் காகிதமாக இல்லாமல், திட்டங்களுடன் தயாராக இருப்பீர்கள்.

02

வீடுகுப்பையாக இருந்தால், நாம் தேடும் எதுவும் அங்கே கிடைக்காது. மனம் பல எண்ணங்களால் குழம்பியிருந்தால், எதுவும் கவனத்தில் இருக்காது. சூழலையும் மனதையும் சுத்தமாக வைத்திருங்கள்.





03

காலையில் வேலையைச் செய்ய ஆரம்பிக்கும் முதல் இரண்டு மணி நேரத்தில்தான் எதையும் வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் செய்ய முடியும். அந்த நேரத்தில் வேறு எதிலும் கவனம் வேண்டாம்.

04

சின்னச்சின்ன விஷயங்களில் நேரத்தை வீணடித்து, தேவையற்ற தாமதங்களை ஏற்படுத்தி, கடைசிநிமிட பரபரப்பில் எல்லா வேலைகளையும் செய்யாதீர்கள். நேரத்தில் எதையும் முடித்துவிடுங்கள்.





05

வழக்கமாக நீங்கள் செய்யும் வேலைகளைப் பற்றி அதிகம் யோசிக்காதீர்கள். அவற்றைக் கைப்பழக்கமாக தானாகவே செய்துவிடுங்கள். எல்லாவற்றையும் யோசித்துக்கொண்டிருந்தால், மூளை களைத்துவிடும்.

06

புதிதாக ஒரு வேலையை எடுத்துச் செய்யும்போது, அதை வேகமாகவும் திறமையாகவும் எப்படிச் செய்வது என்று யோசியுங்கள். மற்றவர்களைவிட வித்தியாசமாகச் செய்வதற்கு வழிகள் புலப்படும்.





07

சிலருக்கு மனம் எதையோ யோசிக்கும், கண்கள் எங்கேயோ பார்க்கும், கைகள் எதையோ செய்யும். இப்படி இருந்தால் எந்த வேலையும் முழுமை பெறாது. ஒரு நேரத்தில் ஒரே ஒரு வேலையில் 100% ஈடுபடுங்கள்.

08

தொடர்ச்சியாக வேலை பார்த்தால் உடலும் மனமும் சோர்ந்துவிடும். 45 நிமிடங்களுக்கு ஒருமுறை எழுந்து 5 நிமிடங்கள் சற்று நடந்து ரிலாக்ஸ் செய்யுங்கள், தண்ணீர் குடியுங்கள். உற்சாகம் கிடைக்கும்.



09

நிறைய வேலைகள் தேடி வரலாம். எல்லாவற்றையும் செய்ய நேரம் இருக்காது, செய்வது சாத்தியமும் இல்லை. முக்கியமான, பயனுள்ள வேலைகளை மட்டும் செய்யுங்கள். மற்றவற்றுக்கு நோ சொல்லுங்கள்.



10

ஒரு கம்ப்யூட்டரின் மெமரி போல இல்லாமல், நம் நினைவாற்றலின் அளவு குறுகியது. பல விஷயங்களை மறப்பதால் வேலைகள் தடைபடலாம். எதையும்நோட்டிலோ, செல்போனிலோ குறித்து வையுங்கள்.



11

உங்கள் கவனத்தை சிதறடிக்கும் எல்லாவற்றையும்ஒதுக்கித்தள்ளுங்கள். 'எனக்கு மன உறுதி அதிகம். எதுவும் என்னை பாதிக்காது' என்று நினைக்காதீர்கள். டெக்னாலஜிகள் எவரையும் புரட்டிப் போட்டுவிடும்.



12

இணையம், சோஷியல் மீடியா, டி.வி, போன் என எல்லாவற்றிலும் ஏராளம் தகவல்கள் வந்து கொட்டும் யுகம் இது. எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு ஒன்றும் ஆகப்போவதில்லை. தேவையற்றதை கவனிக்காதீர்கள்.



13

வாட்ஸ்அப் பார்ப்பது, மெயில்களுக்கு பதிலளிப்பது என எல்லாவற்றையும் நிமிடத்துக்கு நிமிடம் செய்ய வேண்டியதில்லை. வேலைகள் கெடும். ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை அவற்றை கவனித்தால் போதும்.



14

ஒரு பிரச்சனையை இப்போதைக்கு சமாளித்தால் போதும் என நினைக்காதீர்கள். மேலோட்டமாக சரிசெய்வதைவிட, அதன் அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து தீர்ப்பதே நீண்ட கால நிம்மதியைத் தரும்.




15

ஒன்றுமில்லாத ஒரு விஷயத்தை ரொம்ப யோசித்து, 'இது இப்படி ஆகிவிடுமோ', 'அது அப்படி முடிந்துவிடுமோ' என்றுகுழம்பாதீர்கள். சில விஷயங்களை நிறைய யோசித்தால் பயம் மட்டுமே மிஞ்சும்.



16

தேவையான உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு, போதுமான தண்ணீர், சுகாதாரமான சூழல் இவை இருந்தால் உடல்நலம் நன்றாக இருக்கும். உற்சாகமாக உழைக்கவும் முடியும்.



17

இனிமையான உறவுகளும், நல்ல நண்பர்களும் சூழ இருப்பது வரம். அவர்களுடன் உரையாடுவதும் பொழுதுபோக்குவதும் மன அழுத்தம் குறைக்கும் மருந்து.



18

ஒரு செயலைச் செய்யும்போது, 'இதை இப்போது செய்ய வேண்டியது அவசியமா?' என்ற கேள்வியை உங்களுக்குள் கேட்டுக்கொள்ளுங்கள். 'இல்லை' என்ற பதில் வந்தால், அதைச் செய்யாதீர்கள்.



19

எரிச்சல், கோபம், குழப்பம் போன்ற எதிர்மறைஉணர்வுகள்சிலநேரங்களில் மனதை ஆக்கிரமிக்கலாம். 'இது என் இயல்பு கிடையாது' என்று உறுதியாக நினைத்து அந்த உணர்வுகளைத் துரத்துங்கள்.



20

சொல்லைவிட செயலுக்கு வீரியம் அதிகம். வெறுமனே பேசுவது உங்களை சிறந்த நிர்வாகியாகக் காட்டாது. பேச்சை நிறுத்திவிட்டு செயலில் உங்கள் திறமையைக் காட்டுங்கள்.





உண்மையைப் பேசும் உயர்வான நிர்வாகம்!

தங்கம் மற்றும் தாமிரம் வெட்டியெடுப்பதற்காக தோண்டப்பட்டது சிலி நாட்டில் உள்ள சான் ஜோஸ் சுரங்கம். 2010–ம் ஆண்டு ஆகஸ்ட் 5–ம் தேதி இந்த சுரங்கத்தில் வழக்கம் போல் வேலைக்குப் போனார்கள், லூயி உர்சுவா என்பவர் தலைமையிலான 33 பேர் குழு. திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் அவர்கள் தரையிலிருந்து 2,300 அடி ஆழத்தில் சிக்கிக்கொண்டனர்.

நல்லவேளையாக மண் அவர்களை புதைக்கவில்லை. ஒரு குகை போன்ற இடத்தில் அவர்கள் இருந்தனர். வெளியுலகத் தொடர்பு சுத்தமாக அறுந்துவிட்டது. கையில் அவர்கள் எடுத்துப் போயிருந்த உணவை இரண்டு நாட்களுக்கு சாப்பிட முடியும். அதன்பின் என்ன ஆகும், எப்போது மீட்கப்படுவார்கள், நிஜமாக மீட்கப்பட்டு உயிருடன் வீடு திரும்ப முடியுமா என்று எதுவுமே தெரியாது.

அந்த நேரத்தில்தான் உர்சுவா மிகச்சிறந்த நிர்வாகியாக உருவெடுத்தார். ஊழியர்கள் சும்மா இருந்தால் ஏதேதோ சிந்தனையில் பயந்துவிடுவார்கள், அவர்களுக்குள் சண்டை வந்தால் இன்னும் நிலைமை மோசமாகும். எனவே, எல்லோரையும் எல்லா நேரங்களிலும் பிஸியாகவே வைத்திருந்தார். தண்ணீருக்காக ஊற்று தோண்டுவது, சுரங்கத்தின் வரைபடம் தயாரிப்பது, வெளியில் போவதற்கான வழி தேடுவது என்று எல்லோரும் பரபரப்பாக இயங்கினர். இருந்த உணவைக் கொஞ்சம் கொஞ்சமாக 48 மணி நேரத்துக்கு ஒருமுறை மட்டுமே சாப்பிட்டனர். அனைவருடனும் உற்சாகமாகப் பேசி அவர்களுக்கு நம்பிக்கை தந்தார் உர்சுவா.

17 நாட்கள் கழித்து, மேலே இருந்து மீட்புக்குழு ஆழ்துளை ஒன்றைத் தோண்டி, அதன் வழியே உணவைப் போட்டது. 'நாங்கள் அனைவரும் உயிருடன் இருக்கிறோம், காப்பாற்றுங்கள்' என்று குறிப்பு அனுப்பிவைத்தார் உர்சுவா. உதவிகள் கொஞ்சம் கொஞ்சமாக வந்தன. ஆனால், கடைசியாக அவர்களைப் பாதுகாப்பாக சுரங்கத்திலிருந்து மீட்பதற்கு 69 நாட்கள் ஆகிவிட்டன. தன் குழுவில் இருந்த மற்ற 32 பேரும் வெளியேறியபிறகு கடைசி ஆளாக சுரங்கத்திலிருந்து வந்தார் உர்சுவா. தலைமைப் பண்பின் மிகச் சிறந்த அடையாளமாக அது பார்க்கப்பட்டது.

எவ்வளவு நெருக்கடியான ஒரு நேரத்திலும் உண்மையைப் பேசுவதுதான் சிறந்த நிர்வாகப் பண்பு. நிர்வாகத்தில் மிகச்சிறந்தவர்கள் என்று போற்றப்படும் பலரும் உண்மையே பேசுகிறார்கள். நேர்மையான இதயத்திலிருந்தே நேர்மையான செயல்கள் பிறக்கும்.

பொய்களுக்குப் பெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும். ஒரு நிர்வாகி பொய் பேசினால், அவரை யாரும் நம்பமாட்டார்கள். ஒரு முதலாளி பொய் பேசினால், அவர் வார்த்தைகளுக்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். சக ஊழியர்கள் பொய் பேசினால், அவர்கள்மீது நமக்கு இருக்கும் நம்பிக்கை போய்விடும். பொய்களால் உறவுகளே பாதிக்கப்படும்.

தினம் தினம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலரும் பொய்கள் பேசுகிறார்கள். 'மனிதர்களில் 60% பேர் தங்கள் உரையாடலில் பத்து நிமிடங்கள் பேசினால், அதில் ஒருமுறையாவது பொய் சொல்கிறார்கள்'

என்கிறது அறிவியல் ஆய்வு ஒன்று. அடுத்தவர்கள் மத்தியில் தங்கள் மதிப்பை உயர்த்திக்கொள்வதற்காகவே நிறைய பேர் பொய் சொல்கிறார்கள். தங்களைப் பற்றி மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்று சிலர் பொய் சொல்கிறார்கள். உண்மையைக் கேட்டு அடுத்தவர்கள் கஷ்டப்படக்கூடாது என்று சிலர் பொய் சொல்கிறார்கள். காரணம் எதுவாக இருந்தாலும், ஒரு பொய் இன்று இனிக்கும். அதன் விளைவு நாளை கசக்கும்.

உண்மையைப் பேசுவதால் சில சங்கடங்களை எதிர்கொள்வதில் தவறில்லை. பாதுகாப்பின்மை, தன்னம்பிக்கை குறைபாடு, சந்தேகம் போன்ற எல்லவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு உண்மையைப் பேச ஆரம்பிக்கலாம். பெருமைக்காகச் சொல்லும் பொய்கள் வளர்ந்து, காலப்போக்கில் அசட்டுத் துணிச்சலும் திமிரும் வருவதற்கு அவை காரணமாகிவிடும். 'இதைச் சொல்வதால் மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்' என்ற தயக்கம் இல்லாமல் ஒருவர் உண்மை பேசும்போது அவரின் மதிப்பு கூடும். அவர் பேச்சுக்கு மரியாதை இருக்கும்.

உண்மையைப் பேசுவதால் கிடைக்கும் நன்மைகள் அதிகம். அவை:

- மாற்றி மாற்றிப் பேசும் ஒருவரை மற்றவர்கள் சந்தேகத்துடன் பார்ப்பார்கள். அவர்களைப் பற்றிய கிண்டல்கள், கிசுகிசுக்கள் நிறைய பேசப்படும். அது பரஸ்பர உறவையே பாதிக்கும். உண்மையைப் பேசுவதில் இந்தப் பிரச்சனைகள் எதுவும் வருவதில்லை.
- உண்மையைப் பேசும் ஒருவர் எந்த சூழலிலும் அடுத்தவர்கள்மீது பழி போடுவதில்லை. ஏதேனும் தவறாக நடந்தால் அதற்குத் தானே பொறுப்பேற்றுக்கொள்வார். "நான் இதைத் தவறாகச் செய்துவிட்டேன். அடுத்த முறை சரியாகச் செய்கிறேன்" என்று துணிச்சலாகச் சொல்லி மதிப்பு பெறுவார். அந்தத் தவறை சரிசெய்யும் முயற்சியிலும் ஈடுபடுவார். எனவே அங்கே யாரும் பயந்து பயந்து வேலை பார்க்க மாட்டார்கள்.
- ஒருவர் தன் வேலையை மிகச்சிறப்பாகச் செய்வதைத் தடுக்கும் முதல் விஷயம், அவர் மனதில் எழும் சந்தேகம்தான். 'நம் நிர்வாகி என்ன சொல்வாரோ', 'இதில் நிர்வாகம் என்ன எதிர்பார்க்கிறது என்பது தெரியவில்லையே', 'இது தப்பாக முடிந்தால் என்ன ஆவது?' என்று குழப்பமும் சந்தேகமும் மனதை ஆக்கிரமித்தால், வேலை சரியாக நடக்காது. உண்மையைப் பேசும் நிர்வாகி, இந்த சந்தேகத்தை அகற்றிவிடுகிறார். அதனால் வேலை சிறப்பாக நடக்கிறது.
- கடினமான பிரச்சனைகளைச் சந்திக்கும் தருணங்களில் பலரும் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். அதனால் தீர்வு கண்டுபிடிக்க முடியாமல் அந்தப் பிரச்சனையில் மூழ்கித் தவிக்கிறார்கள். 'என்ன பொய் சொல்லி சமாளிக்கலாம்' என்ற சிந்தனையே அப்போது பலருக்கு வரும். உண்மைகளைப் பேசி உண்மையாக நடக்கும்போது இந்தத் தவிப்பு வருவதில்லை. பிரச்சனையை வெளிப்படையாகச் சொல்லி தீர்வு தேட முடியும். ●

RAMRAJ காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 11 இதழ் 5

நவம்பர் 2026

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

கே.ஆர்.நாகராஜன்

முதன்மை ஆசிரியர்

தி.முருகன்

ஆசிரியர்

த.செ.ஞானவேல்

வடிவமைப்பு

K. **உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
எண். 188, தரை தளம்,
14வது குறுக்குத் தெரு சந்திப்பு,
டிபென்ஸ் காலனி, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை - 600 032.
கைப்பேசி: 9952920801
email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

மனதைப் படிப்போம்!

நிர்வாகவியல் படிக்கும் தன் மாணவர் ஒருவரை, “உணவகம் ஒன்றில் ஒருநாள் உணவு பரிமாறும் வேலையைச் செய்து பார். வாடிக்கையாளர்கள் மனநிலையைப் புரிந்துகொள்ளும் அனுபவம் கிடைக்கும்’’ என அனுப்பிவைத்தார் ஒரு பேராசிரியர். மாணவர் போய் அந்த வேலையைச் செய்தார்.

சூடாக சாதம் பரிமாறியதும், “சூடாகப் போடாதே” என ஒருவர் கத்தினார். ஆறிய சாதத்தைப் பரிமாறியபோது, “பழைய சாதத்தைப் போடுகிறாயா?” என்று கோபமாகக் கேட்டார் இன்னொருவர். ‘என்ன வேண்டும்’ என்று மெல்லிய குரலில் பணிவாகக் கேட்டபோது, “சத்தமா பேசு” என்றார் ஒரு வாடிக்கையாளர். ‘என்ன சாப்பிடறீங்க?’ என்று அடுத்தவரிடம் சத்தமாகக் கேட்டபோது, “கத்தாதே! நான் என்ன சாப்பிடறேன்னு ஊருக்கே தெரியணுமா!” என்று கோபப்பட்டார்.

அரை மணி நேரம்கூட அவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. “மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரி இல்லை. ஒருவர் சொல்வதைக் கேட்டு இன்னொருவரிடம் அதைப் பின்பற்றாதே! ஒவ்வொருவரின் இயல்பு அறிந்து பழகு” என்று அவருக்கு அனுபவப் பாடம் எடுத்தார் மூத்த ஊழியர் ஒருவர்.





உயர்வாக முடிவெடுப்போம்!

ஒரு நிறுவனத்தின் மேலாளர் டேபிளில் மிகவும் விலையுயர்ந்த பேனா ஒன்று இருக்கும். முக்கியமான உத்தரவுகளில் அவர் அந்தப் பேனாவைப் பயன்படுத்தியே கையெழுத்து போடுவார். ஒருநாள் அவரது உதவியாளர், “சார், எல்லா பேனாவும் ஒரே மாதிரிதான் எழுதும். இவ்வளவு விலை கொடுத்து ஒரு பேனா வாங்க வேண்டுமா?” என்று கேட்டார். அதற்கு மேலாளர், ‘‘நான் கையெழுத்திடும் ஒவ்வொரு முடிவும் நிறுவனத்திற்கு எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த விலையுயர்ந்த பேனா எனக்கு நினைவூட்டுகிறது’’ என்று சொன்னார்.

ஒரு நல்ல நிர்வாகி எப்போதும் தான் எடுக்கும் முடிவுகளின் எண்ணிக்கையைப் பற்றி யோசிப்பதில்லை; அவற்றின் தாக்கத்தைப் பற்றியே யோசிப்பார்.





நிர்வாகச் சிறப்புக்கு சில நல்விதிகள்!

- மற்றவர்கள் சொல்வதைக் கேளுங்கள். ஆனால், உங்கள் மனம் சொல்வதைக் கேட்டு முடிவெடுங்கள்.
- என்ன மனநிலையுடன் வேலை பார்க்கிறீர்கள் என்பது முக்கியம். 'ஜெயிக்க வேண்டும்' என்ற உத்வேகம் மனதில் இருக்கட்டும்.
- எந்த வேலையையும் சராசரியாகச் செய்யாதீர்கள். சராசரிகள் எப்போதும் சிகரம் தொடுவதில்லை.
- பணத்தைப் போலவே நேரமும் மதிப்புமிக்கது. அதை வீணாக்காதீர்கள்.
- முடிவெடுக்காமல் அதிகம் யோசித்தால் குழப்பமே மிஞ்சும். சரியோ, தவறோ, உரிய நேரத்தில் முடிவெடுங்கள்.
- சுயமரியாதை முக்கியம். ஆனால், அது அகந்தையாக மாறாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
- கண்மூடித்தனமாக எவரையும் நம்பாதீர்கள். நிறைய பேரின் முகமூடிக்குப் பின்னால் இருக்கும் உண்மை முகம் நமக்குத் தெரியாது.
- கடின உழைப்புக்கு மாற்று எதுவும் இல்லை. அது மட்டுமே வளர்ச்சிக்கு உதவும்.



விளையாட விடுவோம்!

விடுமுறை நாளில் ஒரு ஹோட்டலுக்கு நிறைய பேர் குழந்தைகளுடன் வந்து தங்கினார்கள். குழந்தைகள் சிலர் ரிசப்ஷன் ஏரியாவில் பந்தை உதைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். அங்கிருக்கும் விளக்குகள் அதில் உடைந்துவிடுமோ என்று ஹோட்டல் ஊழியர்கள் கவலைப்பட்டனர். குழந்தைகளின் பெற்றோர்கள் அவர்களை அதட்டி பந்தைப் பிடுங்கினர். ஹோட்டல் மேனேஜர் அவர்களிடம் வந்து, எந்த அறையில் அவர்கள் தங்கியிருக்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டார். 'குழந்தைகளால் ஏதாவது சேதம் ஏற்பட்டால் நஷ்ட ஈடு வாங்குவதற்காக அறை எண்ணை விசாரிக்கிறார்களோ' என்று பெற்றோர்கள் கவலைப்பட்டனர்.

ஆனால், சிலநிமிடங்களில் மேனேஜரிடமிருந்து அவர்களுக்கு அழைப்பு வந்தது. "குழந்தைகள் விளையாட தனியாக இடம் ரெடி செய்திருக்கிறோம். அவர்களை வரச் சொல்லுங்கள்" என்றார் மேனேஜர். போய்ப் பார்த்தால், ஹோட்டலின் பின்னால் ஒரு காலியிடத்தில் கால்பந்து மைதானம் போல கோடுகள் போட்டு தடுப்புகள் அமைத்திருந்தனர். குழந்தைகள் உற்சாகமாகி விளையாடத் தொடங்கினர். குழந்தைகளின் விளையாட்டை 'சேட்டை' என்று கண்டிக்காமல், அவர்களுக்கு இடம் ஏற்படுத்தித் தந்த நிர்வாக அக்கறைக்கு பெற்றோர்கள் நன்றி சொன்னார்கள்.

அனுபவம் கொடுப்போம்!

டிசைனர் உடைகள் விற்கும் ஒரு ஷோரூமுக்கு வந்தார் ஒரு பெண். அந்தப் பெண்ணின் எளிய தோற்றத்தைப் பார்த்தால், அவர் அங்கிருக்கும் விலையுயர்ந்த உடைகளை வாங்குவார் என்று நம்ப முடியாது. ஆனாலும் கடையின் மேனேஜர் அவரைப் புன்னகையுடன் வரவேற்றார். அந்தப் பெண்ணுக்கு உடைகளைக் காட்டும்படி ஒரு பணிப்பெண்ணிடம் சொன்னார்.

வந்தவர் உடைகளை ஆசையாகப் பார்த்தார். குறிப்பிட்ட உடை ஒன்றை எடுத்து, "இது எனக்கு எப்படி இருக்கும்?" என்று கேட்டார். "அணிந்து பாருங்கள்" என்று அதைக் கொடுத்து ட்ரையல் ரூமுக்கு அனுப்பினார் பணிப்பெண். அந்தப் பெண் அதை அணிந்து வந்து, கண்ணாடியில் தன்னை அழகு பார்த்தார். பணிப்பெண் சில திருத்தங்கள் செய்து கச்சிதமாக்கி, "இது உங்களுக்கு நல்லா இருக்கு" என்று புன்னகையுடன் சொன்னார். பிறகு அதைத் திருப்பிக் கொடுத்த அந்தப் பெண், "இன்னொரு நாள் வந்து வாங்கிக்கறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

"அவரால் அந்த உடையை வாங்க முடியாது என்று பார்த்தாலே தெரிகிறதே, அப்புறம் ஏன் இவ்வளவு அக்கறை எடுக்கிறீர்கள்?" என்று கடைக்கு வந்திருந்த இன்னொரு வாடிக்கையாளர் கேட்டார். "எங்கள் கடைக்குள் வரும் ஒவ்வொருவரும் எங்களுக்கு முக்கியம். கனிவாக அவர்களுக்கு சேவை செய்வது எங்கள் கடமை. மனிதர்கள் தங்களுக்குக் கிடைக்கும் அனுபவத்தை மறக்க மாட்டார்கள். இனிய அனுபவத்தை எல்லோருக்கும் கொடுப்போமே" என்றார் மேனேஜர்.



உள்ளே மறைந்திருக்கும் பொக்கிஷம்!

ஒரு பழமையான புத்தர் கோயில் தாய்லாந்து நாட்டில் இருக்கிறது. சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கோயிலைப் புதுப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது கோயிலில் இருந்த பிரமாண்டமான புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றி வேறு இடத்தில் பாதுகாப்பாக வைக்க முடிவெடுத்தனர். களிமண்ணைக் குழைத்து, அதன்மீது சிற்ப வேலைப்பாடுகள் செய்து, வண்ணங்கள் பூசி உருவாக்கப்பட்ட மற்ற சிலைகளைப் போலவே அதுவும் ஒன்று என துறவிகள் கருதினர்.

கிரேனை வைத்து அதைத் தூக்க முயன்றபோது, வழக்கமான களிமண் சிலைகளைவிட அது எடை அதிகமாக இருப்பதைத் துறவிகள் உணர்ந்தனர். தூக்கி வேறு இடத்தில் வைத்தபோது ஏற்பட்ட அதிர்வில், அந்த சிலையில் விரிசல் ஏற்பட்டது. அந்த விரிசலின் உள்ளே ஏதோ ஜொலிப்பதை ஒரு துறவி கவனித்தார். நெருங்கி ஆராய்ந்த அவர், சிலையின் மேல்பூச்சை அந்த இடத்தில் அகற்றினார். உள்ளே புத்தர் சிலை தங்க நிறத்தில் ஜொலித்தது. எல்லா இடங்களிலும் சிலையின் மேல்பூச்சை மொத்தமாக அகற்றிவிட்டுப் பார்த்தால், அது முழுக்க முழுக்க தங்கத்தால் உருவாக்கப்பட்ட சிலை. இவ்வளவு காலமாக களிமண் பூச்சில் அந்தப் பொக்கிஷம் மறைந்திருந்தது.

கோயிலின் பழைய ஆவணங்களை அதன்பின் துறவிகள் ஆராய்ந்தனர். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு தாய்லாந்தின்மீது பர்மா ராணுவம் படையெடுத்து வந்தது. அந்நியர்களிடமிருந்து தங்கச் சிலையைக் காக்க, அதைக் களிமண் சிலை போல மாற்றிவைத்தனர் அப்போது இருந்த துறவிகள். துரதிர்ஷ்டவசமாக அந்தப் போரில் எல்லா துறவிகளும் இறந்துவிட, அந்த ரகசியம் யாருக்கும் தெரியாமலேயே போய்விட்டது.

பொக்கிஷம் போல நமக்குள் ஒளிந்திருக்கும் பல திறமைகளை ஜொலிக்க விடாமல், இந்தக் களிமண் பூச்சு போல இருக்கும் சில பண்புகள் தடுக்கின்றன. நம்மை நிர்வாகம் செய்ய நாம் கற்றுக்கொண்டால், இந்தப் பிரச்சனைகளைத் தவிர்க்கலாம். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

- எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும். கோபத்தில் பேசும் வார்த்தைகள் எவரையும் நம்மிடமிருந்து விலகச் செய்யும். பொறாமை உணர்வு நம்மை மற்றவர்களிடமிருந்து விலகச் செய்யும். எரிச்சலும் சோகமும் நம்மை நம்மிடமிருந்தே விலகச் செய்யும். எந்த எதிர்மறை உணர்வும் வேண்டாம்.

- 'என்னால் முடியும்' என்று ஒரு விஷயத்தைச் செய்ய ஒப்புக்கொள்வதற்கு முன்பு உங்களின் பலம் என்ன, அதைச் சரியாகச் செய்யும் திறமை உங்களுக்கு இருக்கிறதா என்று பாருங்கள். சில நேரங்களில் 'என்னால் முடியாது' என்று பின்வாங்குவீர்கள் அல்லவா? அவற்றைச் செய்வதற்கான திறமையை எப்படி வளர்த்துக்கொள்ள முடியும் என்றும் யோசியுங்கள்.

- எந்த ஒரு பிரச்சனை குறுக்கிட்டாலும், 'என்ன இது, இப்படி ஆகிவிட்டதே' என்று விரக்தியுடன் அதை அணுகாதீர்கள். 'இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு

காண நமக்கு முன்பாக என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன' என்று நேர்மறையாக அணுகுங்கள்.

• வேலை, தொழில், வியாபாரம் என்று எந்தப் பணிச்சூழலிலும் நீங்கள் சந்திக்கும் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இருப்பார்கள். அவர்களின் அபிப்ராயங்கள், சிந்தனைகள் என்று எல்லாமே வெவ்வேறுவிதமாக இருக்கும். இந்த வித்தியாசங்களைப் புரிந்துகொண்டு அவர்களை அணுகுங்கள்.

• ஒரு முரண்பாடு, ஒரு வாக்குவாதம், ஒரு தவறு என்று எதிர்மறையாக ஏதேனும் நிகழும்போது நம் முன்னே இரண்டு வாய்ப்புகள் உள்ளன. ஒன்று, அதைப் பெரிதுபடுத்தி இன்னும் மோசமான பிரச்சனையாக மாற்றுவது. இரண்டு, அதைச் சரிசெய்து பிரச்சனையைத் தீர்ப்பது. எப்போதும் இரண்டாவது வாய்ப்பைத் தேர்வு செய்யுங்கள்.

• எந்த வேலையும் சில நேரங்களில் நெடுஞ்சாலைப் பயணம் போல இனிமையாக இருக்கும். சில நேரங்களில் காட்டுவழிப் பயணம் போல கரடுமுரடாக மாறும். எப்போதும் ஒரேமாதிரி வேலையை அணுகுங்கள். எந்த நேரத்திலும் பதற்றத்தை வெளிப்படுத்த வேண்டாம்.

• எந்த வேலையையும் உரிமை எடுத்துக்கொண்டு செய்யுங்கள். உங்களின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி உற்சாகமாக உழைப்பது சிறப்பு. ஓட்டப்பந்தயத்தில் ஜெயிப்பவர்கள் மட்டுமே கவனிக்கப்படுவார்கள். அப்படி, மற்ற எல்லோரையும்விட முந்திக்கொண்டு செயல்படுங்கள்.

• பொறுமையும் புரிதலும் இருப்பவர்களைத்தான் எல்லோருக்குமேபிடிக்கும். பணிபுரியும் இடத்தில் ஒருவர் தவறு செய்யும்போது, 'இவர் எப்போதுமே இப்படித்தான்' என்று அவசரப்பட்டு முடிவுக்கு வரக்கூடாது. அந்தத் தவறை சரிசெய்யப் பார்க்க வேண்டும். மற்றவர்களுக்குள் ஏற்படும் முரண்பாடுகளையும் டென்ஷனையும் இணக்கமாகத் தீர்க்க வேண்டும். ஒருவரை ஒருவர் மதித்து, மற்றவர்களுக்கு உதவிகள் செய்யும் சூழலை உருவாக்க வேண்டும்.

இப்படியெல்லாம் ஒருவர் தன்னைச் சரியாக நிர்வாகம் செய்து, தன் பணியையும் நேர்த்தியான முறையில் செய்யும்போது, அவரிடமும் நிறைய மாற்றங்கள் நிகழும். அவர் செய்யும் வேலையிலும் மகத்தான மாற்றங்கள் ஏற்படும்.

தன் பண்புகளை நேர்த்தியாகப் பராமரிக்கும் ஒருவர் மனதாலும் உடலாலும் ஆரோக்கியமாக இருப்பார். அதனால் அவருக்கு நல்ல தூக்கம் கிடைக்கும். நாள் முழுவதும் அவரால் புத்துணர்வுடன் வேலை பார்க்க முடியும். அதனால் அவர் வேலைகளை மற்றவர்களைவிட சீக்கிரமாகவே முடிப்பார். குடும்பத்துக்கும் பொழுதுபோக்குகளுக்கும் அவரால் நேரம் செலவிட முடியும்.

வேலை செய்யும் இடத்திலும் மற்றவர்களுடன் அவர் சிறப்பான உறவைப் பராமரிப்பார். நேர்மறையான மனதுடன் வேலை பார்ப்பதால், அவரால் மற்றவர்களைவிட அதிகமாக வேலை பார்க்க முடியும். நிர்வாகம் எப்போதும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்கும் நபராக அவர் இருப்பார். ●

வெண்மை சந்தா...

மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~280~~/-
மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/-

இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/-
மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/-

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)







இளம் தொழில்முனைவோர் மாநாட்டில் ராம்ராஜ்!

திருப்பூரில் இந்தியத் தொழில் கூட்டமைப்பும் (Confederation of Indian Industry), Young Indians அமைப்பின் திருப்பூர் பிரிவும் இணைந்து 'SIGNOGRAPH 4.0' என்ற இளம் தொழில்முனைவோர் மாநாட்டை நடத்தின. மாணவர்கள் மற்றும் இளம் தொழில்முனைவோருக்கு ஊக்கமும் வழிகாட்டுதலும் அளித்து, தொழிலில் அவர்கள் புதுமை படைத்து வளர்ச்சி அடைவதற்கு வழிகாட்டும் மாநாடு இது.

இந்த மாநாட்டில் 'திருப்பூரின் பெருமை' (Pride of Tiruppur) என்ற மதிப்பிற்குரிய விருது, ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. விருதைப் பெற்றுக்கொண்ட அவர், 'Passion to Purpose' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

"ஆயிரக்கணக்கான நெசவாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்ற இலக்குடன்தான் நான் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தை ஆரம்பித்தேன். இந்த சமூக நோக்கமும், நம் பாரம்பரிய உடையான வேட்டியை மதிப்பிற்குரியதாக மாற்ற வேண்டும் என்ற லட்சியமும்தான் என்னை முதலிடத்துக்கு உயர்த்தியது. எந்த ஒரு தொழிலைச் செய்தாலும், அதில் நாம் மட்டுமே வெற்றி பெறுவது என்பது வளர்ச்சி இல்லை. நம்மைச் சுற்றியிருக்கும் அனைவரும் வெற்றி பெற வேண்டும் என்ற பரந்த எண்ணம் வேண்டும். இப்படிப்பட்ட நோக்கம் இருப்பவர்கள் நிச்சயம் வளர்ச்சி அடைவார்கள்" என்று தன் தொழில் வெற்றியிலிருந்து சிறப்பான வழிகாட்டுதலைத் தந்தார் திரு. K.R. நாகராஜன்.

மாநாட்டில் 'We The Leaders' மக்கள் அமைப்பின் முதன்மைச் சேவகர் திரு. கே. அண்ணாமலை சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, தலைமைப்பண்பு குறித்து சிறப்புரையாற்றினார். கொங்கு மண்டலத்தின் முக்கியத் தொழிலதிபர்கள், CII மற்றும் Young Indians அமைப்புகளின் நிர்வாகிகள் மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்தனர்.







வித்யாரம்பம் நிகழ்வில் ராம்ராஜ்!

விஜயதசமி திருநாளை முன்னிட்டு, நம் வீட்டு மழலைகள் கல்விக்கோயிலுக்குள் அடியெடுத்து வைக்கும் வித்யாரம்பம் நிகழ்வில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் பங்கேற்றார்.

தினமலர் நாளிதழும் ஸ்ரீசக்தி பள்ளிகளும் இணைந்து நடத்திய வித்யாரம்பம் நிகழ்வு, திருப்பூர் மாநகரின் ராக்கியாபாளையம் ஸ்ரீராஜராஜேஸ்வரி திருக்கோவிலில் நடைபெற்றது. இந்த தெய்வீக நிகழ்வில் திரு. K.R. நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அவரை ஸ்ரீசக்தி பள்ளி சேர்மன்கள் திரு. தங்கவேல், திரு. தீபன் தங்கவேல் ஆகியோர் வரவேற்றனர்.

கோவிலில் வழிபாடுகள் நிறைவுற்றதும், அருள்திரு அவிநாசி காமாட்சி தாச சுவாமிகள், ஸ்வாமினி மஹாத்மானந்த சரஸ்வதி, ராஜராஜேஸ்வரி கோவில் டிரஸ்ட் நிறுவனர் திரு. ஞானகுரு, கிளாஸிக் போலோ நிறுவன செயல் இயக்குனர் திரு. சிவராம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி. ஹர்ஷினி ஆகியோருடன் திரு. K.R. நாகராஜன் இணைந்து குழந்தைகளுக்கு எழுத்தறிவித்தார். தங்கள் பெற்றோருடன் வந்திருந்த குழந்தைகள், கோவிலில் சான்றோர்கள் வழிகாட்டுதலுடன் நெல்லில் 'அ' எழுதி கல்வியைத் தொடங்கினர்.

வித்யாரம்பம் நிகழ்வில் பங்கேற்ற குழந்தைகள் அனைவருக்கும் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் சார்பில் ராம்ராஜ் லிட்டில் ஸ்டார் வேட்டி– சர்ட் வழங்கி, அவர்கள் கல்வியில் சிறந்து விளங்க திரு. K.R. நாகராஜன் ஆசீர்வாதம் செய்தார்.



வாருங்கள் மாற்றுவோம்!

ஒரு தொழிற்சாலையின் மேனேஜர் பொறுப்பேற்ற கணேஷ், அங்கிருந்த ஒரு நடைமுறையைப் பார்த்து குழப்பம் அடைந்தார். அங்கு உற்பத்தியாகும் பொருட்கள் நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிகளுக்குச் செல்கின்றன. இதில் தொலைதூரத்தில் இருக்கும் பகுதிகளுக்கு திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை மட்டுமே வாகனங்கள் டெலிவரிக்குப் போக வேண்டும். மற்ற நாட்களில் அருகே இருக்கும் பகுதிகளுக்குச் செல்ல வேண்டும் என்று நடைமுறை இருந்தது. தொலைதூரப் பகுதிகளில் தட்டுப்பாடு இருந்தாலும், மற்ற நாட்களில் அங்கே டெலிவரி செய்வதில்லை.

"ஏன் இப்படி?" என்று அவர் கேட்டபோது, "இது ரொம்ப நாளா கம்பெனியில இருக்கற கட்டுப்பாடு சார். இதைக் காலம் காலமா எல்லோரும் மதிச்சு நடக்கறோம்" என்று மூத்த ஊழியர்கள் சிலர் சொன்னார்கள். "இதற்கு என்ன காரணம்" என்று கேட்டபோது யாருக்கும் தெரியவில்லை.

அங்கிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற பழைய ஊழியர்கள் நிறைய பேரிடம் பேசி ஒருவழியாகக் காரணத்தைக் கண்டுபிடித்தார் கணேஷ். ஈராக் – குவைத் போர் நடந்தபோது டீசலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. சனி, ஞாயிறு விடுமுறையில் நிறைய டீசல் வாங்கி சேகரித்து, திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் தொலைதூரம் செல்லும் லாரிகளுக்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள். மற்ற நாட்களில் அவ்வளவு டீசல் கிடைக்காது என்பதால், அருகில் உள்ள பகுதிகளுக்கு லாரிகள் போய்வந்தன. போர் முடிந்து, டீசல் தட்டுப்பாடு சரியானபிறகும் அந்த நடைமுறையை அப்படியே பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

கணேஷ் முதல் வேலையாக அதை மாற்ற, அது டெலிவரியை எளிமையாக்கியது. நிறுவனத்துக்கு நல்ல லாபமும் வந்தது. பழைய நடைமுறைகள் நமக்கு அனுபவத்தைக் கொடுக்கின்றன; புதிய சிந்தனைகள் நமக்கு முன்னேற்றத்தைக் கொடுக்கின்றன. அனுபவத்தை மதிப்போம்; ஆனால் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் பழக்கங்களை மாற்ற வேண்டும். அதற்கு சில விதிகள்:

- பல ஆண்டுகளாகப் பின்பற்றப்படுகிறது என்பதாலேயே ஒரு நடைமுறை சரியானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அது ஏன் உருவாக்கப்பட்டது, அது இன்றும் தேவையா என்பதை அலசிப் பாருங்கள்.
- அனுபவம் வாய்ந்தவர்கள் சொல்கிறார்கள் என்பதாலோ, நீண்டகால நடைமுறை என்பதாலோ எதையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாதீர்கள். காரணம் புரியாமல் எதையும் பின்பற்றக்கூடாது.
- 'எனக்குத் தெரிந்தவரை இது சரியான முறை' என்ற தனிப்பட்ட நம்பிக்கையைவிட, செலவு, நேரம், தரம், உற்பத்தித்திறன், வாடிக்கையாளர் திருப்தி போன்ற அளவீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- ஒரு செயலை எப்படிச் செய்கிறோம் என்பதைவிட, அதனால் என்ன பலன் கிடைக்கிறது என்பதே முக்கியம். எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்றால், செயல்முறையை மாற்றத் தயங்காதீர்கள்.
- ஒரு மாற்றம் உண்மையில் முன்னேற்றம் தருகிறதா என்பதைக் கவனியுங்கள். பயனில்லாத மாற்றத்தைத் திருத்துங்கள்; பயனுள்ள மாற்றத்தை மேம்படுத்துங்கள்.
- தொழில்நுட்பம், சந்தை, மக்கள் ரசனை என அனைத்தும் மாறிக்கொண்டிருக்கின்றன. அதற்கு ஏற்ற மாற்றம் அவசியம்.

எதைத் தொடர வேண்டும், எதை மாற்ற வேண்டும், எதை நிறுத்த வேண்டும் என்பதைச் சரியாகத் தீர்மானிப்பவரே சிறந்த நிர்வாகி.

Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL

RAMRAJ©

VESTS

BRIEFS • TRUNKS

Inners for Winners!



Label-free comfort

100% Soft combed cotton jersey fabric

Seamless body construction

Maximum free movement

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-11-2026. Posted at Tirupur BPC on 5th of every month.

